
# மழையில் நனைந்த ஒரு பொழுதில்...




நடா சுப்பிரமணியம்

# மழையில் நனைந்த ஒரு பொழுதில்...

நடா சுப்பிரமணியம்

**மழை நனைந்த ஒரு பொழுதில்...**

**(கவிதைகள்)**

ஆசிரியர்: நடா சுப்பிரமணியம்
© நடா சுப்பிரமணியம்
முதல் பதிப்பு: ஆனி 2023
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய், யாழ்ப்பாணம்.
அச்சு: பரணி அச்சகம், நெல்லியடி
அட்டைப்பட வடிவமைப்பு: பரணீ
நூல் வடிவமைப்பு : க.பரணீதரன்
விலை: 600/-
பக்கம்: 166
விலாசம் : துரையன் வளவு, புலோலி கிழக்கு, பருத்தித்துறை

**Malaiyil Nanaintha Oru Poluthil**


(A Collection of Poems)

Author : Nada Subramaniyam
© Nada Subramaniyam
First Edition: June 2023
Published By Jeevanathy Kalaiaham, Alvai, Jaffna.
Printed at: Baranee Printers
Cover designed by : Baranee
Layout : K.Bharaneetharan
Price : 600/-
Pages: 166

ISBN : 978-955-0958-74-0

ஜீவநதி வெளியீடு – 278

## சமர்ப்பணம்



சின்னஞ்சிறு வயதில் கவிதா
உலகம் என்ற சொர்க்கபுரிக்கு
என் விரல் பற்றி அழைத்துச் சென்ற
எனது மூத்த அண்ணன்
இராஜகோபாலுக்கு...

## உள்ளே...

01. மழையில் நனைந்த ஒரு பொழுதில்....
02. நானும் நீயும்
03. வார்த்தைகளால் வார்க்க முடியாத கவிதை
04. வட கடலோரம்
05. எனது பிரிய சகி
06. காதல் பொன்வண்டு
07. உனது பெயர் என்பது
08. யார் இவன்....
09. தென்றலை தீண்டிய வேளை
10. அதே பார்வை
11. காத்திரு காலம் வரும்.....
12. எவர் எழுதிய தீர்ப்பு
13. மல்லிகையாய் மலர்ந்த பொழுதில்
14. தோழி நீ நலமா
15. எனது கவிதை எனது மொழி
16. வடதுருவத்தில் வாழும் ஒரு பெருமரம் பேசுகிறது...
17. இவளுக்குள் இரு வேறு இவள்
18. நீர் தடாகத்தின் ஓரம்
19. பூங்காவனத்தில் அவனுடன்.....
20. யாரோ ஒருவரின்....
21. மௌனம் எனது தவம்
22. புரியாத புதிராக.....
23. விதி செய்தல்
24. மேலான சம்மதம்......
25. உனது மத்தியஸ்தம்
26. சின்னதாய் உன் சிரிப்பு
27. கனவில் உன் கனவு
28. கடலலைகளும் நீயும்
29. சின்னம் சிறு வயதில்...
30. வாழ்வு உயிர் பொருள் நீ
31. மனம்
32. கனவு
33. Sophia Loren (Actress)...
34. ஒரு அன்னையர் தினத்தில் எனது தாயாருக்காக
35. எங்கள் வீடு
36. நானும் ரோஷியும்
37. எழுதாத கவிதைக்கு வரையாத ஓவியம்...
38. ஒரு துளிக்குள் ஒளிந்திருக்கும் ஒரு மகா சமுத்திரம்

# என்னுரை

கவிதா உறவுகளே!

எனது நூலின் தலைவாயிலில் வைத்து உங்களை வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

இது எனது நூல் அல்ல.

இது எனது உலகம்.

எனக்காக நானே படைத்த தனி ஒரு உலகம் இது…

இந்த உலகம் நிசப்தம் நிறைந்தது. இங்கு உங்கள் விழிகளால் எனது எழுத்துக்களுடன் நீங்கள் சப்தமின்றிப் பேசலாம். எழுத்துக்கள் என்ற தூரிகையினால் எனது எண்ணங்களை இங்கு ஓவியங்களாக வரைந்து உங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறேன்.

இரு கரங்களை வீசிக் கொண்டே மழையில் சொட்டச் சொட்ட நனைந்தவாறு மகிழ்வாக நடந்து சென்ற ஒரு பொழுதிற்குள் உங்களை அழைத்துச் செல்கிறேன்.

வாருங்கள் உறவுகளே! நறுமணம் கமழும் ஒரு நந்தவனப்பாதையில் கரம் கோர்த்து நடந்து செல்லலாம்.

இங்கு என்னைப்பற்றியோ அல்லது எனது கவிதைகள் பற்றியோ அதிகம் பேச விரும்பவில்லை.

இந்தக் கவிதைகளில் ஏதாவது ஒன்றில் அல்லது சிலவற்றில் எங்கேயாவது நீங்கள் உங்களைச் சந்திப்பீர்களாக இருந்தால் அல்லது நீங்கள் சந்தித்த அனுபங்களை உணர்வீர்களானால் உங்களில் ஒருவனாக நானும் இருந்திருக்கிறேன் என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

நான் மிகவும் சாதாரணமானவன்.

எனது வாழ்வும் மிகவும் சாதாரணமானது.

ஆனாலும் பாரசீக க் கவிஞன் ரூமியின் வரிகளில் குறிப்பிட்டது போல:

“நான் ஒன்றும்<br>
ஒரு மகா சமுத்திரத்தின்<br>
ஒரு சிறு துளி அல்ல<br>
ஒரு துளிக்குள்<br>
ஒளிந்திருக்கும்<br>
ஒரு மகா சமுத்திரம் நான்”

“மனதோடு பேசுதல்” என்ற எனது முதலாவது நூல் வெளிவந்து ஏறக்குறைய பத்து வருடங்களுக்குப் பின்னர் எனது இரண்டாவது நூலான “மழையில் நனைந்த ஒரு பொழுதில” வெளிவருகின்றது.

ஒரே ஒரு கருத்தினை இங்கு நான் நட்புடன் வலியுறுத்த விரும்புகிறேன்.

நான் எழுதுவது எனக்காக மட்டுமே.

நான் எழுதுவது எனது மனத்திருப்திக்காக மட்டுமே

விளக்கங்கள் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட பெருவெளி ஒன்று உண்டு.

அந்தப் பெருவெளியில் நிர்ப்பந

தம் அற்ற உந்துதல்களால் பிரசவிக்கப்பட்ட கவிதைகளையே "மழையில் நனைந்த ஒரு பொழுதில்" என்ற இந்த நூலில் உள்ளடக்கி இருக்கிறேன்.

நான் முறைப்படி தமிழைக் கற்றவன் அல்ல. கவிதை என்ற மகா சமுத்திரத்தை நீந்திக் கடந்தவனும் அல்ல. எனக்குள் மறைந்து இருக்கும் என்னை எனது மனக்கண்ணாடியில் பார்த்துப் பார்த்து எழுத்துக்களால் வரைந்து இருக்கிறேன்.

குற்றம் குறைகள் நிட்சயம் நிறைய இருக்கும். அவற்றைத் தமிழ் கூறும் அறிவுலகம் தயை கூர்ந்து என்னை மன்னிக்கட்டும்.

இந்த நூலில் எனது நெஞ்சுக்கு நெருக்கமான சில உறவுகளின் கருத்துரைகளைப் பார்வைக்கு வைத்திருக்கிறேன்.

இன்னும் சில அன்பான உறவுகளின் கருத்துரைகளை வாங்க முடியாமல் போய்விட்டது.

அதில் முக்கியமாக எனது மைத்துனர் நடனசபாபதி அவர்களின் கருத்துரையினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னரே அவரைக் காலம் அழைத்துக் கொண்டுவிட்டது என்பதனை நினைக்கும் போது நெஞ்சம் கனத்து விடுகின்றது.

எனது மைத்துனர் நடனசபாபதி அவஉகளின் இடத்தில் எனது இன்னுமொரு மைத்துனரும், மறைந்த எனது மூத்த அண்ணன் இராஜ கோபால் அவர்களின் நெருங்கிய நண்பரும், எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவருமான சிவபாதம் ஜெயரட்ணம் அவர்கள் எனது நூலிற்கு அணிந்துரை எழுதி இருக்கிறார். அவர் அன்பிற்கு நான் மிகவும் கடமைப்பட்டவன்

மேலும் இந்த நூல் வெளிவருவதில் அதிக ஆர்வம் காட்டிய எமது அன்புத் தோழி ஷோபனா. எழுத்துப் பிழைகளைத் திருத்தி தந்ததுடன் நூலின் உருவாக்கத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தவள். தனது கருத்துரையினையும் தந்த அந்த அற்புதமான தோழி இந்த நூல் வெளிவரும் போது எம்முடன் இல்லை என்று எண்ணும் போது ஏற்படும் வெற்று உணர்வை விபரிக்க வார்த்தைகளே இல்லை.

இறுதியாக, அன்பே வடிவான எனது தாயாருக்கும் எனது சிறிய தாய்மார்களுக்கும் எனது அன்புச் சகோதரனிற்கும் எனது வாழ்வின் எல்லா இன்ப துன்பங்களிலும் என்னுடன் கூடவே பயணித்து வரும் எனது துணைவிக்கும் கண்ணின் மணியான எனது இரு மகன்களுக்கும் எனது குடும்பத்தினருக்கும் எனது உயிர் நண்பர்களுக்கும் எனது அன்பான உறவுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

– நடா சுப்பிரமணியம்

# அணிந்துரை

கவிதைகளில் இலக்கணச் சுத்தம் அவசியமா? இல்லை என்கிறது திருக்குறள். திருவள்ளுவர், திருக்குறளில் விட்ட இலக்கணப் பிழைகள் பல. அத்தனை இலக்கணத் தவறுகளையும் பரிமேலழகர் தன் உரையில், இலக்கணக் குறிப்பில் எடுத்துக் காட்டிவிடுகின்றார். எடுத்துக் காட்டினேராயினும், அவற்றையெல்லாம் “வழு அமைதி” என்று விடுகிறார். அதாவது இந்தத் தவறுகள் ஒரு கவிஞனுக்குத் தமிழ் வழங்கிய அனுமதி. அதில் தவறுகள் இருப்பினும் அமைதி கொள்க என்பதாகும். இவ்வளவு புரிந்துணர்வு தமிழருக்கு இருந்ததால்தான் என்னவோ தமிழ் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தும் ஒரு சிதையாத மொழியாகப் பேணப்படுகின்றது.

காலம் என்னும் பாதையில் கவிதை என்னும் ஊர்தி பன்னெடுங் காலமாகவே ஊர்ந்து வந்து கொண்டிருக்கிறது. எம் புரிந்துணர்வினால் மரபுக்கவிதை என்னும் பெயர் கடந்து புதுக்கவிதை என்னும் பெயர் பெற்று நாளை ஏதோ ஒரு பெயர் தாங்கி ஊர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இது ஒன்றும் எங்களுக்குப் புதிதல்ல. பாரதியார் ”வசன கவிதை” என்ற தலைப்பில் புதுக்கவிதை எழுதினார். பாரதி வழியில் ந. பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் போன்றோர் புதுக்கவிதைகளைப் படைத்து தமிழ் புதுக்கவிதைகளை வளர்த்தனர். இவ்வழி வந்தோரே கவிஞர் மீரா, கவிக்கோ அப்துல் ரகுமான், மு. மேத்தா, கவிஞர் வைரமுத்து ஆகியோர்.

அவர்கள் வழி ஒற்றி பீடுநடை போடுகின்றார் எமது ஊர்க் கவிஞர் நடா சுப்பிரமணியம். இவர் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற யாழ்ப்பாணத் தமிழர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகத் துறையில் பட்டம் பெற்றவர். இந்தத் தொகுப்பு அவருடைய இரண்டாவது வெளியீடு. பல வருடங்களுக்கு முன்பே “மனதோடு பேசுதல்” என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தார். முகநூலில் எம்முடன் பகிர்ந்து, பலரின் பாராட்டுகளையும் பெற்றவை பல, இவரின் புதுக்கவிதைகள்.

”மழையில் நனைந்த ஒரு பொழுதில் ” என்று கவிதைத் தொகுப்பு ஆரம்பிக்கின்றது. மழையுடன் ஆரம்பித்து, கடலின் ஆர்ப்பரிப்பில் தொடர்கிறது, இவர் கவிதைகள். காட்சி அமைப்பு, வர்ணனை எம்மை அந்தச் சூழலுக்கே

அழைத்துச் செல்கின்றது. “சின்னஞ்சிறு வயதில்” கவிதையில் வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்வுபூர்வமாய் ஒருசில வரிகளில் கொட்டிவிட்டுப் போகின்றார்.

நிறைவேறாத ஆசைகள், கனவுகள், எதிர்பார்ப்புகள், எதிர்பாராத சந்திப்புகள், பிரிவுகள் என்று பல உணர்வுகளை நாயகன், நாயகி இரு பாவத்திலும் எழுதியது சிலாகிக்கப்பட வேண்டியது. சில இடங்களில் இது என்ன ஒரு காதலனின் உணர்வா? அல்லது நல்லதொரு நண்பனின் அங்கலாய்ப்பா? என திக்குமுக்காட வைக்கின்றது.

மலராகி, மரமாகி, நீர்த் தடாகமாகி, கடலாகி, காதலியை பொன்வண்டாக்கி இப்படிப் பல கோணங்களில் கவிதைகள் உணர்வு பூர்வமாய் விரிகின்றன. ”யாரோ ஒருவரின்” கவிதையில் தவறான உடம்பில் புகுந்துவிட்ட ஒரு ஆன்மாவின் அவல ஓலம் நெஞ்சைத் தொடுகின்றது. பல இடங்களில் மனதுடன் பேசுவது ஒரு உளவியல் வெளிப்பாடு. அருமை!

அன்னையர் தினம் ஒட்டிய கவிதை, “எங்கள் வீடு” இரண்டுமே உள்ளத்தை உருக்குகின்ற, புலம் பெயர் தமிழர்களின் தொப்புள்கொடி நன்றி மறவா உணர்வுகளைப் பறை சாற்றி நிற்கின்றன. சில கவிதைகளில் பெண்ணைத்தான் வர்ணிக்கிறாரோ என்றெண்ணித் தொடர்ந்தால் அது நாயைப் பற்றியது. இப்படி, பல இடங்களில் தன் திறமையை கவிஞர் நடா காட்டியுள்ளார்.

அலங்கார வார்த்தைகள் இன்றி உள்ளதை உள்ளபடி எளிய தமிழ் வார்த்தைகளில் படைக்கப்பட்டது தமிழ் வாசகர்கள் அனைவரையும் ஈர்த்திழுப்பதாய் அமைந்துள்ளது. இந்தக் கவிதைத் தொகுப்பு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் எனக்குப் பெரும் நம்பிக்கை உண்டு. இந்த வெளியீடு வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனின் தாள் பணிந்து நிற்கிறேன்.

திருவாளர். ஜெயரட்ணம் சிவபாதம்
(“அத்திவாரம் இல்லாத இந்துமதம்” நூலாசிரியர், தமிழ் ஆர்வலர்,
இலக்கியவாதி - சிட்னி அவுஸ்ரேலியாவில் இருந்து)

1. நட்பில் பூத்த மலர்கள்

## காதல் மழையும் நனைந்த கவிஞனும்

காதல் மழையில்
நனைந்து திளைத்த
நண்பனின் கவிதை மழையிது.

மழையில் நனைந்த சுகத்தை
மறக்க அவன் கவிதைச்சுகம்.

அவன் உருவிலும் மாறான்
உறவிலும் மாறான்

இருபதின் வரைபை
அறுபதில் வரைந்திடும்
உணர்விலும் மாறான்.

எங்கிருந்து வருகிறது
இவ்வளவு காதல்
எங்கிருந்து வருகிறது
அவ்வளவு கனவுகள்

மனதுக்குள் மலர்த்தோட்டம் போட்டானா

காதல் நறுமணம் எப்போதும்
மென்மையாய் மேன்மையாய்
முடிவிலி வரிகளாய்

இளமையின் வரிகள்
இனிமையின் வருடல்
அலையெனத் தொடரும்

மனக்கரைதனைத் தழுவும்.
இத்தனை வரிகளுக்குமேன்
பேனாக்கள் சலிக்கவில்லை

ஓ…இந்த வரிகளை அவையும் காதலிக்கின்றனவோ!

உவமையைச் சொன்னால்
தாமரைக் கோபுரமும்
விலைவாசியும் போல…
காதலும் உயர்வு
அதன் கனிவினில் பிறந்த கவிதையும் உயர்வு

தொடருதுன் வரிகள் சுகமளித்திட
ஆனால் சுமையளித்திடும்
எங்கள் அரசிடும் வரிகள் போல்...

- திரு திருவாகரன் சிவகுருநாதன்

## 2. நட்பில் பூத்த மலர்கள்

# இயற்கையோடு பயணிக்கும் (காதல்) கவிதைகள்...!

நடாவுக்கும் எனக்கும் இடையே உள்ள நீண்டகால நட்பு என்பது கவிதை, இலக்கியத்தோடு சேர்ந்தே வளர்ந்தது எனலாம்.

வாசிப்பதும், அது சம்பந்தமாகப் பேசுவதும் எங்களுக்குள் வாடிக்கையாகவே இருந்து வருகிறது. உண்மையான நட்பை என்றும் மதிக்கும் நண்பன் - கவிஞன் நடாவின் கவிதைப் பூக்களின் தொகுப்பை வாசித்து வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பை பெருமையாகக் கருதுகிறேன்.

நடாவின் முதலாவது கவிதைத் தொகுப்பான "மனதோடு பேசுதல்" என்ற நூலிலும் "நண்பனின் பார்வையில்...!" என்ற தலைப்பில் எனது பதிவும் இடம்பெற்றிருந்தது. அந்த கவிதைத் தொகுப்பில் அதிகம் நட்பையே முதன்மைப் படுத்தியிருந்தார் என்பது எங்கள் நட்பு வட்டத்தில் பெருமைக்குரிய பேசு பொருளாக அமைந்தது.

அடுத்து வெளிவர இருக்கும் "மழையில் நனைந்த ஒரு பொழுதில்...!" என்ற இந்த கவிதைத் தொகுப்பானது, அதிகம் இயற்கையோடு இணைந்து பயணிக்கும் காதலை மையப்படுத்திய கவிதைகளாக வெளிவந்திருப்பதை இன்னொரு பரிமாணமாகக் கருதுகிறேன்.

நடாவின் கவிதைகளுக்குள் இருக்கும் சிறப்பென்பது, மென்மையான வார்த்தைப் பிரயோகம், இலகு நடை, இயற்கையுடன் கூடிய கற்பனை வரிகள் என்பன ஆரம்பிக்கும் போதே ஆவலைத் தூண்டுகின்றன. தெளிந்த நீரோட்டம் போல் அமைந்த மென்மையான சிறுசிறு வரிகள், வாசிக்கும்போதே வார்த்தைகளை மனதில் பதிய வைக்கின்றன.

இந்தக் கவிதைத் தொகுப்பில் கடல், அலை, மழை, மலை, மாலை, தூறல், புயல், மேகம், கண்ணீர், வானம், மலர், விழிகள், காற்று, கண்ணீர், கூந்தல், தேவதை, தேன், வண்டு, சிறகுகள், பறவைகள், செடி, நிலவு, கனவு போன்ற இயற்கையுடன் இணைந்து எம்மோடு பயணிக்கும் இனிமையான சொற்கள் அதிகம் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். சந்தோசம், துக்கம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும், இயற்கை அழகை - பெண்ணின் அழகைக் கவிதையில் வர்ணிப்பதற்கும் துணை நிற்கும் சொற்கள் இவை.

இந்தக் கவிதைத் தொகுப்பின் தலைப்பிலேயே “மழை” என்ற வார்த்தை இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம். அன்றிலிருந்து இன்றுவரை மழையோடு வாழும் கவிதைகள் அதிகம். நூலில் இடம்பெற்றிருக்கும் காதலை மையப்படுத்திய அனேக கவிதைகளில் இவ்வாறான இயற்கைக்கு நெருக்கமான சொற்களைப் பயன்படுத்தி தன் படைப்புகளுக்கு உயிரூட்டியுள்ளார் நடா.

சில கவிதை வரிகள் வாசிக்கும்போதே மனதுக்கு வலியை தருவதுண்டு, உள்ளத்தை வருடுவதுமுண்டு. நடாவின் சில கவிதைகளில் காதல் தோல்வி, பிரிவு, இழப்பு, உறவின் மரணம், போன்ற மனதைத் தொடும் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அனேகமானவை காதல் ஏக்கத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஏனையவை நடைமுறை வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன.

அவற்றில் சில –

“எங்கள் வீடு“ – என்ற கவிதை தாயகத்தில் வாழ்ந்த கூட்டு வாழ்க்கையை நினைவூட்டும் கவிதையாக மலர்ந்திருக்கிறது.

“எனது தாய்க்காக...!“ – என்ற கவிதை தாயின் மகிமையை வெளிப்படுத்தும் மனதைத் தொட்ட கவிதையாக அமைந்திருக்கிறது.

“நானும் ரோசியும்“ – என்ற கவிதை, முதுமையில் தனிமையின் வலியை சொல்கிறது.

“நானும் நீயும்“ – என்ற கவிதை, வித்தியாசமான ஒரு சிந்தனை. கடல் அலையாக நீயும், கடல் கரையாக நானும் என்பதாக அமைந்த ஒரு காதல் கவிதை. இதில் கரை யார்? கடல் யார்? ஆணா, பெண்ணா என்பதை நாங்களே தீர்மானிக்க வேண்டும்.

“வட கடலோரம்...!“ – என்ற கவிதை, ஆண்டுகள் பல கடந்து ஊர் வந்தபோது, ஒரு மாலைப் பொழுதில் கடலோரம் நடந்துவந்து மணலில் அமர்ந்தபோது எழுந்த நினைவுகளின் வலி சுமந்த கவிதையாக...!

“வட துருவத்து பெருமரம் பேசுகிறது...!“ இயற்கையில் மரங்களுக்கு இருக்கும் சிறப்புகளை, காதலாக சித்தரித்த கவிதை. வித்தியாசமான பார்வை.

இப்படியாக ஒவ்வொரு கவிதையும் அர்த்தமுள்ளவையாக படைக்கப்பட்டிருக்கிறது. இறுதியாக “மல்லிகையாய் மலர்ந்த பொழுது...!“ என்ற கவிதையின் இறுதி வரிகள் என் மனதைத் தழுவியது.

“உனது காதல் சொட்டும் தீண்டலில்
நான் கரையும் வேளையில்தான்
நான் உணர்ந்து கொள்கிறேன்
நான் ஏன் மலராக மலர்ந்தேன் என்று!”

வாழ்த்துகள் நடா....!

என்றும் நட்புடன்
ரவி கந்தையா.

## 3. நட்பில் பூத்த மலர்கள்

கவிதை தோன்றி, அது அந்தந்தக் கால பரிமாணத்தை உள்வாங்கி, அன்று வாழ்ந்தார்க்கும் இன்று வாழும் எல்லோருக்கும் புரியும்படி காட்சி வடிவமாக எழுதப்படும் பொழுது மிக இலகுவாக, படிப்பவர்க்கு அந்த அனுபவங்கள் அவர்கள் வாழ்விலும் பட்டுச் சென்றது போல் இருக்கும்.

“நான் யார் என்று கூறினால் இவர்களால் நம்பமுடியாமல் இருக்கும்”

இந்த வரிகள் எனக்கும் நடாவுக்கும் இன்னும் எங்களுடன் வாழ்ந்த பலருக்கும் ஆழ்மனதில் ஆர்ப்பரித்துக் கொண்டே இருக்கும். இதை “என்னைப் பற்றி உனக்குத் தெரியவில்லை, நான் யார் என்று கேட்டுப்பாரு” என்று பலர் கூறக் கேட்டுள்ளோம். ஒரு சாதனையாளனின் மனக்குமுறல் நடாவின் வரிகள்.

பல வெற்றிகளைக் குவித்த ஒருவன் அவற்றை இனியும் தான் அடையப்போக உள்ள வெற்றியின் இலக்கின் படிக்கற்களாகப் பார்க்கும்போது உள்ள மன அடக்கம், தான் இன்னும் இலக்கை அடையவில்லை என்னும் மனப் பக்குவத்தில் அந்த வெற்றிகளைப் பெரிதாக எண்ணாமல் தனது இலக்கை இன்னும் எட்டவில்லை என்ற ஆதங்கத்தில் அமைதி இழந்து விடுகின்றான். அதன் பதிவுகளாகப் பல கவிதைகள்!

”ஏதோ ஒரு உணர்வு … என்னவென்று
எனக்கே விளங்காதது… எவ்வாறு எடுத்தியம்ப…
அடைத்து வைக்க முடியாத
அலையாக
மனக்கடல் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது…”

நான் அமைதியாக ஏமாற்றங்களை எனக்குள் அடக்கிக் கொள்வேன் (கொல்வேன்).

நடா, அமைதியாக அவனுக்குப் பிடித்த கவிதை மொழியில் அவற்றைப் பிரசவித்துத் தருவான்.

இந்தத் தொகுப்பில் ஒரு கவிஞனின் கால ஓட்டம்

கடலில் படகாக மென் அலைத் தென்றலிலும் பெரும்புயல் சீற்றத்திலும் காதலும், ஏக்கமும், கனிவும், பாசமும், நட்பும், தாய்மையும், தந்தை போற்றலும் குழைந்து, திரண்டு வந்துள்ளது.

என்றும் உன் மணி
மணிவண்ணன் ஏகாம்பரம்

## 4. நட்பில் பூத்த மலர்கள்

“அவள்
தென்றலின் தீண்டல்
பூக்களின் வருடல்
புல்லினத்தின் பாடல்
தோகை மயில்களின் ஆடல்
என்னுயிர்க் காதலின் தேடல்”

(மனதோடு பேசுதல் – செல்வன்)

நற்றமிழில் கவிதைகள் இயற்றி, கற்ற, பெற்ற கல்விப் பயனை சமுதாயத்துடன் பகிர்ந்து பிறந்த நாட்டிற்கும் ஊருக்கும் வீட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார் செல்வன் என்ற திரு. நடா சுப்பிரமணியம்!

”கவிதை என்பது எனக்கு பிரசவ வலி”

கவிதை என்பது தனது மொழி, ஒளி, வளி, என ஒரு கவிதையில் இக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

“மழையில் நனைந்த ஒரு பொழுதில்” என்ற இக் கவிதைத் தொகுப்பிற்கு எனது கருத்தையும் பதிவிடச் சந்தர்ப்பம் தந்ததற்கு முதற்கண் நடாவிற்கு என் நன்றி!

இக் கவிஞர் தன் உணர்வை அல்லது சொல்ல வருகின்ற செய்தியை பல உருவகங்கள், உவமைகள், படிமங்கள் கொண்டு, வார்த்தைகளையும் வர்ணனைகளையும் கலந்து அக் கவிதைகளை அலங்கரித்து, எளிமையுடன் எழுதியுள்ளமை அருமை!

ஆணாயும் பெண்ணாயும் தன்னைக் கற்பனை செய்து, இரு பக்கமா யும் இருந்து தன் உணர்வுகளை கவிதையில் சொல்லிக் காட்டியமை சிறப்பு!

அவரின் நீண்ட வரலாறு ஒன்றை தனக்குப் பேசத் தெரிந்த மொழியான கவிதையூடு எமக்கு அறியத் தந்துள்ளார். என்னைப் போன்ற அதிகம் கவிதைகள் பற்றிய புரிதல், தெளிவு அற்றவர்களும் இவரின் கவிதையை நிட்சயம் வாசித்து ரசிப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

இக் கவிஞன், தான் யார், எப்படியானவன், என்பதை தனது கவிதையொன்றிலே சிறு குறிப்பாகப் பதிவிட்டுள்ளார்:

"காதல் என்பது
எனது உயிருடன் உயிராகக் கலந்த
எனது உண்மையான உள்ளத்து உணர்வு...

கர்ணன் கவச குண்டலத்துடன்
பிறந்தது போல

திங்களொடும்
செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும்
தமிழ் பிறந்தது போல

காதலுடன் கூடப் பிறந்தவள் நான்
காதலுக்காகப் பிறந்தவள் நான்

எனது காதல்
காதல் மீது மட்டுமே... "

"வடதுருவத்தில் வாழும் ஒரு மரம்
பேசுகிறது..." என்ற கவிதையில் பெண்ணாகத் தன்னை உருவகித்து, படிமங்களுடன் கூறியுள்ளார்.

அதே போல மரத்தை, மனிதனுக்குரிய பண்புகள் கொண்டு விபரித்து எழுதியதன் மூலம் மரங்களின் மகத்துவமும் மனிதனுக்கு இருக்க வேண்டிய நல்ல பல பண்புகளையும் அதனூடு எமக்குக் கூறுவதுடன் மட்டுமன்றி தன்னை அவ்விடத்தில் வைத்து உருவகித்து கவிதை எழுதியமை அற்புதம்!

கவிஞரின் சிறந்த கற்பனைத் திறனையும் அறிவாற்றலையும் புடம் போட்டுக் காட்டும் கவிதை அதுவாகிறது.

தனது கனவுகள், கற்பனைகள் கலைந்த கவலையை கடலுடன் பேசுவது போல அவளுடன் பேசுகிறார் கவிஞர் "வட கடலோரம்" என்ற கவிதையில்!

தான் பிறந்த மண்ணையும் நேசித்த உறவுகளையும் பிரிந்து வாடும் வேதனையைக் கூறும் விதமாக எழுதப்பட்ட கவிதையை வாசிக்கும் போது கவிஞரின் உள்ளம் கண்ணீர் விட்டுக் கதறி அழுகின்ற உணர்வை எம்மையும் உணரச் செய்கிறது.

"மீண்டும் ஒரு நாள்
உன்னிடம் வருவேன்

அப்போது சொல்கிறேன்
எந்தன் கனவு

எவ்வாறு கை தவறிப் போனது என்று. . . ”

மல்லிகையினதும் பட்டாம்பூச்சியினதும் உவமை கொண்டு “காதல்” என்றால் என்ன? என்ற சம்பாஷணையை மிகவும் ரசிக்கும் படியாக “மல்லிகையாய் மலர்ந்த பொழுதில்” என்ற கவிதையில் எழுதியுள்ளார்.

அம்மா பற்றியும், “என் வீடு” என்ற இரு கவிதைகளும் உறவுகளை அவர் எவ்வளவு நேசிக்கிறார் என்பதையும் ஊருடனான நினைவுகள் அவரை விட்டு இன்னும் விலகாது ஏங்கிக் கொண்டே இருக்கிறார் என்பதனையும் காட்டுகின்றன.

“நானும் ரோஷியும்” என்ற கவிதையும் தனக்குத் தானே சமாதானம் சொல்வது மாதிரியாக எழுதிய “காத்திரு காலம் வரும், எவர் எழுதிய தீர்ப்பு, கனவில் உன் கனவு” என்ற கவிதைகளும் உணர்வு பூர்வமானவையாக வாசிப்போர் மனதையும் கனக்கச் செய்கின்றன.

தன் காதலி மனைவியான தருணத்தையும் இக் கவிஞர் மறவாது “வாழ்வின் உயிர்ப் பொருள் நீ” என்ற கவிதையில் எழுதி, முரண்பட்ட இரு குணாதிசயம் கொண்ட இருவர் அன்பாலும் காதலாலும் கரம் கோர்த்து வந்ததை தன் எழுத்தால் வண்ணமயமாக்கியுள்ளார்.

“எனது உயிர்ச் செய்தி” என்ற கவிதையில், இரு இறகுகள் கொண்டு காதல் உணர்வில் உல்லாசமாய் உலா வருவதை, மெச்சத்தக்க வகையில் கற்பனை கலந்து தனது எழுத்தின் மூலம் உயர்ந்த நிலைக்கு உயர்த்தியுள்ளார் இக் கவிஞர்.

அதில் வரும் ஒரு சில மகத்தான வரிகளைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

“பரந்த பால்வெளியே
எழுதும் மடலாக…

ஒளிப் பிழம்பான சூரியனே எழுதும் எழுது கோலாக …

கண் சிமிட்டும்
விண் மீன்களே
உயிர் மெய் எழுத்துகளாக…

இந்தப் பிரபஞ்சமே
பிரமித்து நிற்க …
உயிரின் செய்தியை ….
ஒரு தாரக மந்திரத்தை …
கவிதையாக வரைந்து…
நான்கு வேதங்களும்

அந்தக் கவிதையில்
கரைந்து போயிருக்கும்”

“எனது பிரிய சகி” என்ற கவிதையில், உண்மை என்பது கரும்புள்ளி போல, உண்மையை உண்மையாக எடுத்துச் சொல்ல முடியாது தவிப்பதாயும், பேச முடியாத ஊமையாகி, கவிதை என்ற மொழி கொண்டு பேசுவது போல கவிஞர் வித்தியாசமான முறையில் விளக்கியமை அழகு!

பிரயோகித்த உவமைகள் கவிதையின் கதைக்கு மிகப் பொருத்தமானதாக உள்ளன.

அடுத்து, அவரின் ஏக்கத்தின் உச்சக் கட்டமாக அமைந்த கவிதை களாக: “கனவு, யாரோ ஒருவரின், எவர் எழுதிய தீர்ப்பு” என்ற கவிதைகளை வாசிக்கும் போது,

“நினைப்பதெல்லாம்
நடந்து விட்டால்
தெய்வம் ஏதுமில்லை
நடந்ததையே நினைத்திருந்தால்
அமைதி என்றுமில்லை”

என்ற கவிஞர் கண்ணதாசன் அவர்களின் இப்பாடல் வரிகள் இக் கவிதைகளுக்கு விடை கூறுவது போல் அமையும் என என் மனதில் பட்டது.

இறுதியாக…

ஒரு துளிக்குள் ஒளிந்திருக்கும் ஒரு மகா சமுத்திரம்” என்ற கவிதையில்

ரூமியின் வரிகள் கொண்டு துன்பங்கள், துயரங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள் என எவை வரினும் தனது வாழ்வை உயிர்ப்புடன் வாழ்வதே முடிந்த முடிவு என்கிறார்.

“கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி” என்கிறார் பாரதி. இவ் வரிகள் இக் கவிஞருக்கும் மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

”தேவ மைந்தர் இயேசு மரணித்து உயிர்த்தெழுந்தது போல மீண்டும், மீண்டும் உயிர்த்தெழுந்து” தனது கனவைக் கைவிட மாட்டேன் என்று உறுதியுடன் எழுதிய வரிகள், இக்கவிஞர் நினைத்ததை நடத்தி முடிக்கும் தன்னம்பிக்கை கொண்டவர் என்பதை நிரூபணம் செய்கிறது!

பல பட்டறைகளில் பட்டை தீட்டப்பட்ட பக்குவப்பட்ட பண்பு இவரின் அனைத்துக் கவிதைகளிலும் தெரிகிறது.

இவ்விரு படைப்புகள் மட்டுமன்றி இன்னும் பல படைப்புகள் நீங்கள் வெளியிட்டு, சிறந்த கவிஞர்கள் பட்டியலில் உங்கள் பெயரும் பொறிக்கப்பட வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்!

அன்புடன்
ஷோபனா - சசிதரன்

## 5. நட்பில் பூத்த மலர்கள்

“எண்ணம் துடிக்கும்
அவன் இதயம் பாடும்
கனவுகள் வெடிக்கும்
கவிதைகள் மலரும்
கண்ணீர் வடிக்கும்
சொல்நீர் சுரக்கும்”

அன்று தன் மனதோடு பேசி, எம்மை மகிழ்வித்தவன் இன்று மழையோடு நனைந்து, தனது இரண்டாவது கவிப்படைப்புடன் எம்மையும் மழைச் சாரலுக்குள் தன்னுடன் அழைத்துச் செல்கின்றான்!

பருத்திநகர் பெற்றெடுத்த செல்வன்!

செழுந்தமிழ்க்கல்வி, பரந்த பட்டறிவு,

வற்றாத படைப்பாற்றல், ஓயாத உழைப்பு, மாறாத மனித நேயமும் கொண்ட ஒருவன்!

நண்பர்களின் நண்பன்!

இவன் சிரித்தால் குழந்தை! சிந்தித்தால் ஞானி!

“மழையில் நனைந்த ஒரு பொழுதில்” என்பது செல்வனின் இரண்டாவது கவிப்படைப்பு!

கவிஞன் தன்னை இருபது வயதுக்குள் அடையாளம் காட்டாவிட்டால் “அவன் கவிஞனே ஆக முடியாது” என பிரெஞ்சுக் கவிஞன் “பாடிலேர்” கூறியதைப் பொய்யாக்கி தனது ஐம்பதாவது வயதில் மனதோடு பேசுதல் என்ற கவிதா நூலை வெளியிட்டு எங்கள் மனதைக் கொள்ளையடித்த செல்வன், இப்போது “மழையில் நனைந்த ஒரு பொழுதில்...” என்ற தனது இரண்டாவது குழந்தையையும் பிரசவித்து, எங்கள் கைகளில் தவழ விட்டிருக்கின்றார்!

மொழிக் கடலில் மூழ்கி, தமிழ் முத்தெடுத்து, இயற்கையோடு ஒன்றி, இயல்புகளின் அழகுகளில் மயங்கிக் கிறங்கி, இயற்கையோடு தொடங்கி, பெண்ணில் நிறைவுறும் காதலை தன் கவிதைகளால் காதலிக்க கற்றுத் தந்திருக்கின்றார்.

“கடல் அலைகளும் நீயும்” என்ற இவரது கவிதையில் கடல் அலைகளைப் பெண்ணாக உருவகித்து, அலைகள் தரையை வந்து தொட்டுச்

செல்வதை, பெண் ஆசை பொங்கும் காதலுடன் தன்னைத் தழுவிச் செல்வதாக இவர் வடித்திருப்பது வியக்கத்தக்கது!

“ஓடோடி வந்து
கரைகளை மெல்ல
தொட்டு அணைப்பதும்
பின்னர் மெல்ல நழுவி மறைவதும்....
மீண்டும்
அளவற்ற ஆசையுடன்
ஓடோடி வந்து அணைப்பதும்...”
என்று

அலைச்சாமரம் வீசும் கடல் அலைகளை எம்மவர் மேலேயும் அள்ளித் தெளித்து விடுகின்றார் கவிஞர்!

காதல் என்பது அந்தம் நிச்சயிக்கப் படாத ஒன்று. அதன் மென்மையான சுழிக்குள் மூழ்காதவர்கள் மிக மிகக் குறைவு. அதிலும் கவிஞர்கள் காதல் வயப்படும் போது தோன்றுகின்ற கவிதைகள் வாசகர்களின் பசியைப் போக்கும் உணவாகின்றது.

காதல் தந்த சுகத்தில் மல்லிகை மலர் தன் அனுபவத்தை மனம் விட்டுப் பேசும்

“மல்லிகையாய் மலர்ந்த பொழுதில்” என்ற இவரது கவிதை எமக்கு ஒரு பெரு விருந்து!

மாலையில் மலர்ந்த ஒரு மல்லிகை மலரின் மேல் வந்தமர்ந்த பட்டாம் பூச்சி உதட்டுடன் உதடு வைத்து முத்தமிட்டுக் கொண்டே, காதலுடன் மென்மை யாக அதன் காதுகளில் “காதல் என்றால் என்ன” என்று வினவுகின்றதாக கவிஞர் அந்த மல்லிகை மலரை வைத்தே காதல் என்றால் என்ன என்று விளக்க முயன்று இறுதியில்

“வேறு என்ன சொல்ல
காதல் என்பது ஒரு அனுபவம்”
என்றும்

“அந்த அனுபவ ஆற்றில்
முக்குளிக்க வைத்தவன் நீ”

என்று கூறியும் வாசகர்களாகிய எம்மையும் காதல் என்ற இன்ப ஆற்றில் முக்குளிக்க வைத்து விட்டார்.

“உனது காதல் சொட்டும் தீண்டலில்
நான் கரையும் வேளையில் தான்
நான் உணர்ந்து கொள்கிறேன்
நான் ஏன் மலராக மலர்ந்தேன் என்று..,”

இறுதியில் மல்லிகை மலர் தான் மலராக மலர்ந்ததன் பயனை

உணர்ந்து கொள்வதாக எடுத்தியம்பி, எம்மையெல்லாம் காதல் என்ற இன்ப ஆற்றில் சுகமாக நீந்த வைத்துச் சென்றுள்ளார்!

கவிஞர்களின் காதல் இயற்கையில் தொடங்குகின்றது, பெண்ணில் நிறைவு பெறுகின்றது. செல்வனின் கவிதைகளும் இதற்கு விதி விலக்கா என்ன???....

இயற்கை மீது இவர் கொண்ட தீராக் காதலை எடுத்தியம்பும் கவிதைகளாக "வட கடலோரம்", "நானும் நீயும்" வடதுருவத்தில் வாழும் ஒரு பெரு மரத்தின் கதை" மற்றும் "காதல் பொன்வண்டு" போன்றன அமைந்திருக்கின்றன.

"மழையில் நனைந்த பொழுதில்" என்ற நடாவின் இரண்டாவது கவிப் படைப்பானது எல்லோருக்கும் ஒரு நல்ல கவி விருந்தாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை!

பல்கலைக் கழக நாட்களில் சந்திக்கத் தவறிய ஒரு கவி நண்பன் நடா. முகநூல் மூலமாக தன் கவிதைகளால் என்னையும் ஒரு "கவிப்பிரியை "ஆக மாற்றிய ஒரு நல்ல நண்பன்!

உன் கவிப்பயணம் மேலும் தொடரவும், உன் புகழ் இமயத்தைத் தொட்டு விடவும், உன் வெற்றி திக்கெட்டும் பரவவும் என் மனமுவந்த வாழ்த்துகள் நண்பா!

-வாசுகி விமலராஜ்

### 6.நட்பில் பூத்த மலர்கள்

## கவிஞனின் அழயுளக் கொதிப்பின் விரிப்பு
## மழையில் நனைந்த ஒரு பொழுதில்...

இக் கவிதை நூலின் ஆசிரியர் செல்வன், முன்னர் “மனதோடு பேசுதல்” என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். தன்னுணர்வெழுச்சிகளுக்கு முதன்மையளித்து காலத்துக்குக் காலம் எழுதப்பட்ட கவிதைகளை அதிகம் கொண்ட தொகுதியாக “மழையில் நனைந்த ஒரு பொழுதில்…” என்பது அமைந்துள்ளது. நாற்பது கவிதைகளின் தொகுதியாக அமைந்துள்ளது. தன்னையும் தான் சார்ந்த விடயங்களையும் அதிகம் முன்னிலைப்படுத்தும் வகையில் நான், எனது, நீ, உனது, கனவு, கடற்கரை போன்றவற்றுடன் அதிக கவிதைகள் பிணைந்துள்ளன.

கவிஞரது கவிதையின் புனைவுத் தளத்தை ” எனது கவிதை எனது மொழி” என்ற கவிதையில் தரிசிக்க முடிகின்றது. தன்னுணர்ச்சி வெளிப்பாட்டுக்கான கருவியாக கவிதையை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதையும் அதன் மொழியை எப்படித் தெரிவு செய்கிறார் என்பதையும் அவரே அக் கவிதையினூடு பதிவிடுகின்றார். கவிதை என்பது தன்னிடத்திலுள்ள ஒரே மொழி என்றும் அது தன்னிடத்தே இல்லாதிருந்திருந்தால் தான் பேசத் தெரிந்த ஊமையாக இருந்திருப்பேன் என்றும் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குக் கிடைத்த ஒரே வழி – ஒரே மொழி கவிதை என்பதை அக் கவிதையில் பதிவு செய்துள்ளார்.

”எனது மனதைப்
படம் பிடித்துக் காட்ட
என் கைவசம் இருப்பது
எனது கவிதை…

எனது கவிதை
வீர மறவர் வழி வந்தது

உலகமே
ஒன்று திரண்டு

போர் தொடுத்தாலும்

எவருக்காகவும்
எதற்காகவும்- என்றுமே
தலை வணங்காது எனது கவிதை
உன் ஒருத்தியைத் தவிர...”

இயற்கையின் மீது அதிக காதல் கொண்டு அதனை ஆன்மாவாகத் தரிசிக்கின்ற கவிதைகள் பல இத் தொகுதியில் உள்ளன. இலந்தை மரத்தையும் பொன் வண்டையும் கடற்கரை மணலையும் காற்றையும் தென்றலையும் வானத்தின் வனப்பையும் கண்டு கவிஞரது மனம் புழகாங்கிதமடைகிறது. கதிரவன் ஒளிவிரியும் காலைப்பொழுதும் மாலை மயங்கும் வானத்து வனப்பும் விரிந்துள்ள வானவெளியின் வண்ணமும் அவரது எண்ணத்தில் கவிதைகளாகின்றன. நாம் தினமும் பார்க்கின்ற விடயங்களையே கவிஞரும் பார்க்கின்றார் என்றாலும் அவரது தேடல்கள், வாசிப்புத்திறன், இலக்கிய ஈடுபாடு, நுணுக்கமான பார்வை, அனுபவம் என்பவற்றின் வெளிப்பாடுகள் கவிதை களாக உருவாகி வாசிப்பவர்களை வசியப்படுத்துகின்றது எனலாம்.

“நெருப்பாக எரிந்து கொண்டிருக்கின்ற
எனது நினைவு,
வேர்கள் வரை சென்று
குளிராகத் தீண்டும்
ஒரு இன்ப அனுபவத்தை
எனக்குத் தருவது
இந்த வெண் பனிக்காலம் தான் ....”

என, தன் துன்பத்தை மறக்கச் செய்யும் மருந்தாக இயற்கை இன்பத்தைப் பதிவு செய்துள்ளார்.

புதுக்கவிதைக்கே உரித்தானவையாகக் கருதப்படும் குறியீடு மற்றும் படிம உத்திகளின் சூட்சுமங்களின்றி சராசரி வாசகர்களும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் பரிச்சயமான சொற்களின் வழி தனது கவிதை உலகிற்குள் கவிஞர் எளிமையாக எம்மை அழைத்துச் செல்கின்றார். எனினும் அவரது கவிதைகளில் அதற்கான அழகியல் குறைவின்றிக் காணப்படுவதை பல இடங்களில் அவதானிக்க முடிகின்றது.

“நீண்ட
நின் விரல்கள் நீவி
நீரில் விழுமுன்
நிழலழகில்
விழி தொலைந்து இருந்தேன்

வீசும் காற்றில்

பறக்கும் உன் கூந்தல்
சாமரம் வீசி
எனது முகத்தை மெல்ல
வருடி விடுகிறது”

எனும் கவிதை வரிகள் அழகில் மயங்கித் தொலைந்து போகும் உணர்வுப் பிரவாகத்தை தேர்ந்த சொற்களினூடாகப் பதிவு செய்வதை அவதானிக்க முடிகின்றது.

புலம்பெயர்ந்து வாழ்தலினூடே தாயகத்தின் நினைவுகளை நிராகரிக்க முடியாத தவிப்பு அவரது கவிதைகளில் மேலெழுகின்றது. நீண்ட நாட்களின் பின் தாயகத்தின் கடற்கரையோர அழகில் கரைந்து தன்னை மறக்கின்ற கவிஞர் மீண்டும் அதற்கான சந்தர்ப்பம் எப்போது கிட்டுமோ என்று ஏங்குவது சொந்த மண் மீது அவர் கொண்ட தீராக் காதலையும் ஏக்கத்தையும் உணர்த்தி விடுகின்றது. இத்தொகுதியிலுள்ள கவிதைகளினூடே தன்னைச் சுற்றியுள்ள வற்றின் மீது காதல் கொண்டு பாடும் கவிஞராக இவரைத் தரிசிக்க முடிகின்றது.

கவிஞன் செல்வனுடனான நட்பு எனது பல்கலைக்கழக நுழைவின் முதல் தினத்தில் ஆரம்பித்து பின்னர் குடும்ப நட்பாக மாறி இன்று வரை தொடர்ந்த வண்ணமுள்ளது. செல்வனுக்கு சிறு பராயத்திலிருந்து காணப்பட்ட மொழி ஆற்றலும் வாசிப்பின் மீதான ஆர்வமும் கவிதைகளின் மீது அவருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்ததுடன் கவிஞர் மு. மேத்தாவின் கவிதை நூல்கள், கவி மீதான ஆர்வத்தை மேலும் வளப்படுத்தியது என எண்ணுகிறேன்.

நண்பன் செல்வனது “மழையில் நனைந்த ஒரு பொழுதில்.....” எனும் இரண்டாவது கவிதைத் தொகுதியானது வெளி வருவதில் நான் பெரும் மன மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ஆக்கங்கள் தொடர எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

என்றென்றும் நட்புடன்
ச. சரவணபவான்

### 7. நட்பில் பூத்த மலர்கள்

## மழையில் நனைந்த பொழுதில்

"செல்வன்" எனும் பெயரில் எனக்கு அறிமுகமாகி "நடா" எனப் பலராலும் அன்பாக விளிக்கப்படும் நடா சுப்பிரமணியம், இக்கவிதைத் தொகுப்பின் ஆஸ்தான உரிமையாளன்..... என் உற்ற நண்பன்.

நண்பன் என்ற உரிமைக்கும் மேலாக ஒரு படி மேலே சென்று...

ஒரு மனிதம் நிறைந்த மனிதன்.

செல்வன், அற்புதமான பல படைப்புகளை ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி பிரசவித்திருக்கின்றார். அவருடைய முன்னைய "மனதோடு பேசுதல்" கவிதைத் தொகுப்பிலும் சரி, இந்த "மழையில் நனைந்த ஒரு பொழுதில்" கவிதைத் தொகுப்பிலும் சரி, வாசகர்களை அவரின் கவிதை மழையில் நனைய வைத்திருக்கின்றார்.

ஒவ்வோர் படைப்பும் அவரின் அபரிமிதமான சொல்வளத்தையும் மென்போக்கையும் பறைசாற்றி நிற்கின்றது. காதல் பற்றிய அவர் கவிதைகளில், அவர் பெண்கள் மீது வைத்திருக்கும் மதிப்பு, மரியாதை, அன்பு போன்ற உணர்வுகள் வரிகளினூடே நர்த்தனம் புரிகின்றது. இத் தொகுப்பிலுள்ள அனைத்துக் கவிதைகளையும் அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய முற்பட்டால்...

யுகமொன்று தேவை. இக் கவிதைகள் அனைத்தும் கவிதைப் பிரியர்களை புஷ்பகவிமானத்தில் ஏற்றி வானில் சஞ்சரிக்க வைக்கின்றன.

கவிதைகளின் ஒவ்வோர் வரிகளிடையேயும் பின்னிப் பிணைந்திருக்கும் காதல், அன்பு, பாசம், தோழமை போன்ற உணர்வுகள், வாசகர்களாகிய எம்மையும் அவ்வுணர்வுகளுடன் இரண்டறக் கலக்க வைத்து அவற்றுடனே பயணிக்க வைக்கின்றன. இதுதான் செல்வனின் கவிதைகளின் வெற்றிக்குக் காரணமாகும்.

இத்தொகுப்பின் "உனது பெயர் என்பது" என்ற கவிதையில்,

"உனது பெயர் என்பது
உனது பெயர் மட்டுமல்ல
எனது உயிரின் உயிர்
என்று அறிக"

எனும் வரிகளில், வார்த்தைகளை அழகாக அடுக்கி, உணர்வுகளை வெளிப்படுத்தும் உயிரோட்டமிக்க கவிதையாகப் புனைந்திருக்கின்றார்.

ஒரு தோழியாகவும், வாசகியாகவும், விசிறியாகவும் வாழ்த்துரை தருவதில் மகிழ்ச்சியடைவதோடு, அவர் மென்மேலும் இத்தகைய படைப்புகளை எமக்கு வழங்க வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொண்டு வாழ்த்துகின்றேன்.

- சக்தி ஷண்

## 8. நட்பில் பூத்த மலர்கள்

## வாழ்த்துரை

நல்ல தமிழ்
கொஞ்சி விளையாடும்
நடாவின் கவி நடையில்!
இவன் நாவசைந்தால்
கவிதைத் தோட்டம்
பூத்துக் குலுங்கும்.

நாடி, நாடி
தேடித் தேடி
நல்ல நண்பர்கள் வழிகாட்டி.
மனதோடு பேசிப் பேசி
எங்கள் மனம் கவர்ந்தவர்.
இப்போது....
மழையில் நனைந்த ஒரு பொழுதில்
என்று வருகிறார்
வாருங்கள் நண்பர்களே!
நாமும் நனைவோம்.

இவன் காதல் கனிரசம்
சொட்டும் கவிதைகளால்
அந்தக் காதலும்
இவன் மீது
காதல் கொள்ளும்
தன்னருந் திறத்தினாலும்
ஈர்ப்புமிகு புன்னகையாலும்
மாபெரும் சபைதனையும்
ஆளும் ஆற்றலாளன்!

தென்றலும் தீண்டிய வேளை
பிறந்த கவிதையை
தனது மொழியென்கிறார்
தோழி நீ நலமா?...
என்று தொடங்கி
தன் மனப்பாரங்கள்
முழுவதையும்
காத்திருந்த காலமாக
வார்த்தைகளால் வடிக்க முடியாத
கவிதை என்கிறார்,
மழையில் நனைந்த ஒரு பொழுதில்!

மரம் பேசி நீங்கள்
கேட்டதுண்டோ?
வட துருவ மரம் ஒன்று
நடாவுடன் பேசுகிறது
அங்கே காதல் பொன்வண்டு
கவி பாடுகிறது.

மூன்று பத்து ஆண்டுகளாகப்
பிரிந்திருந்த தன் கடலை,
அந்த வட கடலோரத்தை,
அதன் வனப்பை
கவிபாடும் இந்தக் கவிஞனை

அந்தக் கடல் தாயும்
நடா நலமா, நலமா என்கிறது!
பிரிந்தவர் கூடினால்
பேசவும் வேண்டுமா?
மௌனமும் ஒரு
தவம் என்கிறார்
அந்தக் கடல் அன்னையிடம்!

பூங்காவனத்தில் பூத்துக்
குலுங்கும் பூக்களை
கவி மாலையாகத் தருகிறார்

காலப் பெரு வெள்ளத்தில்
அள்ளுண்டு
பூமிப் பந்தின் திசையெங்கும்
சிதறி வாழும்
தனது நண்பர்களை
நாடி, நாடி
தேடித் தேடி
அழகான நண்பர்கள் கழக
மாலையாக்கி…
நண்பர்களே கேளுங்கள்
எனது கதையை!
என்று உரிமையோடு
உறவாடும்
நடா வாழ்க!
அவர்தம் குடும்பம் வாழ்க!
தொடர்க அவர் கவிப் பயணம்.

என்றும் அன்பு வாழ்த்துடன்
மதி சற்குணநாதன்

9. நட்பில் பூத்த மலர்கள்

## மழையில் நனைந்த பொழுது

"மென்மையான உள்ளங் கொண்டவரே கவிஞர்.." "நடா" என நட்பூக்களால் அழைக்கப்படும் நடராசா சுப்பிரமணியம் எனும் இக்கவிஞர் காதல், அன்பு, பாசம் ஆகிய கவிதைப் பூக்களால் கவி மாலை தொடுத்து எமது கைகளில் தந்திருக்கின்றார். இவற்றை வாசிக்கும் பொழுது பல உணர்வுக் குழையலுக்குள் எம்மைக் கரம் பிடித்து அழைத்துச் செல்வதை உணர முடிகின்றது.

தனது காதலைச் சொல்லச் சென்று வார்த்தைகளால் சொல்லாமல் உருகித் தவிக்கும் இளைஞனின் எண்ணச் சிதறல்களாக "மழையில் நனைந்த பொழுது" எனும் கவிதை காட்டப்படுகின்றது. "நானும் நீயும்", "வாழ்வின் உயிர்ப் பொருள் நீ" ஆகிய கவிதைகள் நேர் எதிர்க் குணங்களே ஒன்றையொன்று கவரும் என்பதைக் காட்டி நிற்கின்றது." நீ வட துருவம்... நான் தென் துருவம்" எனும் உருவக அணி மூலம் தான் சொல்ல வந்ததை எளிதாக விளக்குகின்றார் நடா எனும் அற்புதக் கவிஞர்.

"மீண்டும் எனது இருப்பிடம் திரும்பும் பொழுது எனக்குப் பதிலாக உன்னைச் சுமந்து கொண்டு வருகின்றேன்" எனும் கவி வரிகள் மூலம் "வார்த்தைகளால் வார்க்க முடியாத கவிதையும் "வட கடலோரம்" என்பது முப்பது ஆண்டுகளின் பின் தாயகம் செல்லும் ஒருவரின் நினைவுகளின் நீட்சியைக் காட்டி நிற்கின்றது.

"நின் நீள் விரல் கொண்டு என் மேனி தீண்டிய போது.. கவிதை என் மொழியாயிற்று" என தன் மொழி மூலம் எனது பிரியசகி.. கவிதை கொண்டு செல்லப்படுகின்றது. காதலின் ஆழத்தைப் புலப்படுத்துவதாக "காதல் பொன் வண்டு", "யார் இவன்", "தென்றலைத் தீண்டிய வேளை" ஆகிய கவிதைகள் வருகின்றன. காதல் என்றால் என்ன என்பதனைக் கசிந்துருகிப் பல கவிதைகள் மூலம் வெளிப்படுத்தும் கவிஞர் "தோழி நீ நலமா" என்பதில் எம்மை இன்னொரு பரிமாணத்துக்கு அழைத்துச் செல்கின்றார். விடுதலைக் குறிக்கோளில் எட்டா நிலையில் ஏற்படும் தன்னிரக்க நிலை என்பது மிகப்பெரிய துயராகும். அதை தன் மொழியில் சொல்கின்றார் நடா.

"எது வந்தாலும் நான் நானாகவே இருப்பேன்" என்பதை வட

துருவத்தில் வாழும் ஒரு பெரு மரம் பேசுகின்றது எனும் கவிதை ஊடாக உறுதிபடக் கூறுகின்றார் கவிஞர்.

யாரோ ஒருவரின் வினாத்தாள் மாறி இவரின் கைக்கு வருகின்றது. உண்மையை உணரும் பொழுது தேர்வு நேரம் முடிந்து விடுகின்றது. பலரின் வாழ்வு இப்படித்தானே முடிவடைகின்றது என்பதை கவி மொழியில் ”யாரோ ஒருவரின்” எனும் தலைப்பில் தந்திருக்கின்றார்.

மனிதம் மறக்காத ஒரு மனித குலத்தைப் புதிதாகத் தோற்றுவிக்க வேண்டும் எனும் அவாவை வெளிப்படுத்துவதாக “மேலான சம்மதம் ” எனும் கவிதையும் “முதுவேனிற் காலம் ” எனும் கவிதையோ, எனக்காக நான் வாழ்வதற்கே எனது வாழ்வு காணாமலுள்ளது… இதில் மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளை எங்ஙனம் ஏற்பது எனும் தத்துவத்தைக் கூறுவதாயுள்ளது. கனவு காண்பதற்காய் துயில் கொள்ளச் செல்லும் கவிஞனை “கனவு” கவிதையும் ”எனது மனம் என்பது எனக்குள் இருக்கும் நான்” எனும் மெய்யியலைச் சொல்வதாக “மனம்” எனும் கவிதையும் காணப்படுகின்றது.

அன்னையர் நாளில் அம்மாவுக்கு எழுதியது அன்பின் உச்சத்திலெழுந்த நினைவுப் பேழையாக விரிகின்றது. தன் வீடு பற்றிய எண்ணக் கூட்டத்தை “எங்கள் வீடு” காட்டுகின்றது. ”நானும் ரோஷியும்” என்பதில் மூத்தோர் நிலையும் ”ஒரு துளிக்குள் ஒளிந்திருக்கும் மகா சமுத்திரம்” என்பதில் தன்னைப் பற்றிய வெளிப்பாடு காட்டி தோல்விகளால் தான் துவண்டு விடப் போவதில்லை எனத் தெளிவாக உரக்கக் கூறுகின்றார் கவிஞர்.

Sophia Loren எழுதிய மொழி மாற்றக் கவிதை ஒன்று இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. தனது அழகு மொழியால் எம்மவருக்கு எளிதில் விளங்கும்படி எழுதியுள்ளார்.

நாற்பது கவிதைப் பூக்களால் தமிழ் அன்னைக்கு தன் கவின் மொழி மூலம் கவிதைக்குரிய அணிகளை ஆங்காங்கே தெளித்து தனது இரண்டாவது நூலை எமக்குத் தரும் நண்பன் நடா, இன்னும் பல நூல்களை எழுதி எமக்குத் தர வாழ்த்துகின்றேன்!

நன்றி.

இவண்,

திருமதி உமா காந்தி

Cambridge தேர்வு ஆணைய (International language) ஆலோசகர்.

## 1. மழையில் நனைந்த ஒரு பொழுதில்...

அழகான
காலைப்பொழுது

சின்ன
சின்ன
மழைத்துளிகள்...

தெருக்களை
மெல்ல மெல்ல
நனைத்து நனைத்து

குதூகலமாக
விளையாடிக் கொண்டிருக்கிறது.

ஒற்றைக் குடையுடன்
நடந்து கொண்டிருக்கிறேன்
நான் உனது வீடு நோக்கி...

குடையில் வழியும்
மழைத்துளிகள்...

உடையின்
ஊடே உடலையும்
உள்ளே உள்ள மனதையும்

நனைத்து நனைத்து
எதனையோ
உணர வைக்கிறது

உனக்காக
எழுதிய கவிதை மடலை
மழைத்துளிகள் நனைத்து விடாமல்

நெஞ்சோடு
அணைத்தவாறு
நடந்து கொண்டிருக்கிறேன்

வாசல் மணியை
அழுத்த
கதவைத் திறந்து
உள்ளே அழைக்கிறாய்

எளிமையான உடை
அலங்காரம் அற்ற ஓர் அழகு

கள்ளம் அற்ற
ஒரு காந்தப் பார்வை

கன்னத்தில்
தவழும் கூந்தலிளைகள்

செம்பருத்தி நிறத்து
சின்னம் சிறு இரு இதழ்கள்

காலை நேரம்
சொர்க்கபுரியில்
தேவதைகள்
இவ்வாறு தான் இருப்பார்களோ!!!

பேரழகின்
ஓர் உருவாய்
எனது எதிரே அமர்ந்திருக்கிறாய்

புன்னகை தவழும்
உனது விழிகளின்

ஒளியினைப் பார்த்துப் பார்த்து
பரவசத்தின்
வசப்பட்டு
என்னை உனக்குள்
தொலைத்துக் கொண்டிருக்கிறேன்

பேச வந்த
எனது உயிர்ச் செய்தியை
சொல்லத் துணிவின்றி

ஏதேதோ
பேசிக் கொண்டிருக்கிறேன்

அன்றைய
எனது தயக்கம்

வாழ்வு என்ற
எனது புத்தகத்தின்
ஒவ்வொரு பக்கத்தையும்
வெறுமை என்ற வெற்றுத் தாள்களால்
எழுதி நிறைக்கும் விதி செய்தது...

இறுதியாக....

உனக்காக
வரைந்த கவிதையை
உன்னிடம் கையளித்து விட்டு

உன்னிடம்
இருந்து விடை பெறுகிறேன்
ஓர் பிரியா விடையாக.....

இன்னுமோர் தடவை
உன்னை
நான் சந்திக்கப் போவதில்லை
என்று தெரிந்து இருந்தும்.....

வலிந்து வரவழைத்த
புன் சிரிப்புடன்
கை அசைத்து விட்டு
மெல்ல நடக்க ஆரம்பிக்கிறேன்

நடந்து கொண்டு
இருக்கும் பொழுது

எண்ணங்கள்
உன்னைச் சுற்றிச் சுற்றி
வட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது

சுழற்றி விடப்பட்ட
பம்பரம் போல....

எனது கவிதை மடலை
இந்நேரம் படிக்க
தொடங்கி இருப்பாயோ?

அங்கு இருந்த,
எனது உயிரின் செய்தியை
புரிந்து கொண்டு இருப்பாயோ

மீண்டும்
வாழ்வில் என்றாவது ஓர் நாள்
என்னைத் தேடி வருவாயோ

என்று எல்லாம்
எண்ணும் போது....

என்னையும் மீறி
கண்களில் இருந்து
கண்ணீர்த் துளிகள்

உருண்டு
உருண்டு

கன்னத்தை நனைக்கிறது...

தூவிக் கொண்டிருக்கும்
மழைத்துளிகள்...

கன்னத்தில் உருளும்
கண்ணீர்த் துளிகளை
கழுவிக்கொண்டே செல்கின்றது

தொண்டையைத் தாண்டி
எழும் எனது அழுகைச் சத்தம்...

மழைச் சத்தத்தில்
முழுதாய்க் கரைந்து போகின்றது



## 2. நானும் நீயும்

நீ கடல் அலை
நான் கடற்கரை

நீ என்னவோ
என்னைப் போல இல்லை

நீ எப்போதும்
ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பாய்

நான் எப்போதும்
அமைதியாக இருப்பேன்...

உனக்குத் தெரிந்த மொழியில்
எப்போதும் நீ
இரைந்து கொண்டே இருப்பாய்
எனது காதுகளில்...

எனக்கு என்று ஏது மொழி?

நீ பேசும் போது
நான் கேட்டுக் கொண்டே இருப்பேன்
மௌனமாக...

உனது அமைதி
உனது பேரிரைச்சல்

எனது அமைதி
எனது மௌனம்

உன்னால்
ஒரு கணம் கூட

ஓரிடத்தில் இருக்க முடியாது

ஒரு கணம்
கடலிலிருந்து என்னைத்
தேடி ஓடி வருவாய்...

மறுகணம்
என்னை விட்டு
கடலை நோக்கி
ஓடிச் செல்வாய்...

நான் என்னவோ
எப்போதும் கடலோரம்
உனக்காகக் காத்திருப்பேன்

நீ ஆரவாரம் செய்து
உனது ஆயிரம் கரங்களால்

என்னை ஆசையுடன் தழுவிக் கொள்ளுவாய்

உனது காதற் குறும்புகளில்
உன்னுள் கலந்து
நான் கரைந்து போவேன்
அமைதியாக

## 3. வார்த்தைகளால் வார்க்க முடியாத கவிதை

ஏதோ ஒரு உணர்வு...

என்னவென்று
எனக்கே விளங்காத போது....

எவ்வாறு எடுத்து இயம்ப...

அடைத்து வைக்க முடியாத
அலை கடலென
மனக்கடல் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது....

இன்று. . .

ஒருசில
நிமிடங்கள் மட்டும்....

உன்னுடன் தான் இருந்தேன்....

பல யுகாந்திரக்
காத்திருப்பின் பின்னர்
இன்று இந்தச் சந்திப்பு நேர்ந்தது. . .

மாலைப் பொழுதின்
மழைத் தூறலில்
வானில் வளைந்து நிற்கும் வானவில்லைப் போல...

ஓர் உயர்ந்த மலை
உச்சியில் இருந்து
வழிந்து வரும் ஒரு நீர் அருவி போல...

எனது மனதுக்குள்
உணர்வுப் பிரவாகம்....

இந்த உணர்வினை
விபரிக்க
மனித மொழிகளில் வார்த்தைகள் ஏது...

எனது இரு கண்கள் கொண்டு
உன்னை முழுமையாகப்
பார்க்க முடியவில்லை

உனது முகமலரை...

அதிலும்
உனது இரு கரு விழிகளை
உற்றுப் பார்க்கிறேன்...

அந்த இரு கரு விழிகளின்
உள்ளே உள்ள
இரு நீலக் கண்மணிகளைப் பார்க்கிறேன்

அந்த நீலக் கடலுக்குள்
நீண்டு வியாபித்திருக்கும்
அந்த அமைதிக்குள் விழுந்து
மெல்ல மெல்லத் தொலைந்து போகிறேன்

அந்தச் சில நிமிடங்களின்
பின்னர்...

மீண்டும்
எனது இருப்பிடம்
திரும்பும் பொழுது....

எனக்குப் பதிலாக
உன்னைச் சுமந்து கொண்டு வருகிறேன்....

## 4. வட கடலோரம்

மூன்று தசாப்தங்கள்
சென்ற பின்
எமது கடலோரம் வந்திருக்கிறேன்...

எனது ஊரும்
எனது ஊரின் தெருக்களும்
இங்கு உலாவும் முகங்களும்

என்னை ஏதோ புதியவனாகப் பார்க்கின்றன...

இதோ!

இந்த அந்தி நேரத்தில்
ஆளரவம் குறையும்
ஒரு ஊமைப் பொழுதில்

எனது ஊரின் கடலோரம் அமர்ந்திருக்கிறேன்....

எந்தன் கடலும்
கடலில் துள்ளும் அலைகளும்
உடலைத் தழுவும் கடல் காற்றும் மட்டும்
என்னை நினைவு வைத்திருக்கின்றன....

“நலமாக இருக்கிறாயா?” என்று
ஆசையாக சுகம் விசாரிக்கிறது
கடற்காற்று காதோரம் வந்து....

தூரத்தே துள்ளி விளையாடும்
கடலலைகள் தமது கரங்களை அசைத்து
தமது மகிழ்வினைத் தெரிவிக்கின்றன...

“என்ன நடந்தது?
எங்கே சென்றாய் இவ்வளவு நாளும்?”
என்று என்னை அன்புடன் வினவுகிறது
அமைதியான நீலக் கடல்...

என்னவென்று சொல்ல
எவ்விடத்தில் தொடங்கி
எவ்விடத்தில் முடிக்க...

எல்லாவற்றையும் எண்ணும் போது
கண்ணீர்த் துளிகள் கண்ணோரம் கசிந்து
கன்னத்தை நனைக்கின்றன...

கண்ணீரை மறைக்க
நான் தலையைக் குனிந்து கொள்கிறேன்...

அந்த மங்கலான அந்தி ஒளியிலும்
எனது கண்ணீர்த் துளிகளைக்
கண்டு விட்ட கடலலைகள்

ஓ! என்று இரைச்சல் போடுகின்றன...

இந்தக் கடலுடன் பேச
எனக்கு எந்தத் தடையும் இல்லை...
எப்போதும் நான் தயங்கியதும் இல்லை. . .

இந்தக் கடலுக்கும்
எனக்குமான பந்தம்
வரையறைகளால் சிறைப்பிடிக்கப்பட முடியாதது.

எந்த ஏட்டிலும் எழுதப்படாதது
எந்தச் சங்கத் தமிழ் பாட்டிலும் பாடப்படாதது

இந்தக் கடல்
ஆறுதல் கூறும் அன்னையானவள்
நான் அன்பு செய்யப் பிள்ளையானவள்

நான் காதல் செய்யும்
பிரிய தோழியானவள்

துன்பம் வரும் போது
நல்லதோர் மந்திரியானவள்
பண்பிலே தெய்வமானவள்

இவ்வாறு
அடுக்கிக் கொண்டே போகலாம்

எனது சந்தோஷத்தின் சந்தம்
இந்தக் கடலலைச் சத்தங்களில்
கரைந்து போயிருக்கிறது...

எனது கண்ணீர்த் துளிகளின் உப்பும்
இந்தக் கடல் நீரில்
கலந்து போயிருக்கிறது...

இரவு வேளைகளில்
தன்னந் தனியனாய் இந்தக் கடலோரம்
நான் வந்து அமர்ந்த பொழுதுகளில் கூட...

இந்தக் கடல்
தனது காற்றின் கரங்களால்
வருடி வருடி என்னைச் சுகப்படுத்தியிருக்கிறது...

தனது அலைகள் என்ற
அழகிய கூந்தல் இழைகளால்
எனது உடல் தீண்டித் தீண்டி
சொர்க்கத்தின் சுகங்களைக் கற்றுத் தந்திருக்கிறது...

என்னவளுக்குத் தந்த
காதல் கவிதைகளை
இந்தக் கடற்கரை மண்ணில் தான்
முதன் முதலாக எழுதி எழுதிப் பார்த்துக் கொண்டேன்...

அவளுடன் பேச
வேண்டிய வார்த்தைகளை
இந்தக் கடற் காற்றில் தான் சத்தமாக
உரத்த குரலில் கூறிக் கூறி
ஒத்திகை பார்த்துக் கொண்டேன்...

எமது மண்ணை மீட்கப்
போராடிய நாட்களில் இந்தக் கடலோரம் தான்
எமது தோழர்களுடன் அமர்ந்து
தாயகக் கனவினை நான் வரித்துக் கொண்டேன்...

அப்போது பேசிய வார்த்தைகள்
இப்போதும் இந்தக் கடலில்
எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன...

இன்னும்
எத்தனை எத்தனை கதைகள்?

பேசாப் பொருளை
பேச நான் துணிந்தேன்...

வார்த்தைகள் தாம்
வராமல் நொண்டியடிக்கின்றன . . .

சென்று வருகிறேன்
வென்று வருகிறேன் என்று
இறுதியாகக் கூறிச் சென்றேன்

வென்று வரவில்லை
இன்று வெறுமையாக வந்திருக்கிறேன்

இருள் கவிழ்ந்து கொண்டே வருகிறது
எல்லாத் திசைகளிலும்
காரிருள் சூழ்ந்து இருக்கிறது...

இனி என்ன?

எழுந்து வரும் முன்னர்
மீண்டும் எமது கடலைப் பார்க்கிறேன்

அலைகள் அடங்கிப் போயிருந்தன
கடல் வைத்த கண் வாங்காது
என்னைப் பார்த்துக்
கொண்டே இருக்கிறது...



ஒரு முறை
கட்டி அணைத்து
கண்ணீர் விட்டுக் கதறி அழ வேண்டும்
போலத் தோன்றுகிறது...

என் உயிரிலும் உணர்விலும்
ஒன்றாகி விட்ட என் கடலே!

சென்று வருகிறேன்...

காலம் மீண்டும் என்னை
எங்கோ அழைத்துச் செல்கிறது...

மீண்டும் ஒரு நாள்
உன்னிடம் வருவேன்

அப்போது சொல்கிறேன்
எந்தன் கனவு
எவ்வாறு கை தவறிப் போனது என்று...

## 5. எனது பிரிய சகி

காரிருள் சூழ்ந்ததோர் இரவு
இடியுடன் கூடிய
பெருமழை பெய்து கொண்டிருக்கிறது.

ஒற்றையடிப் பாதை ஒன்றில்
நானும் அவளும் தட்டுத் தடுமாறி
நடந்து கொண்டிருக்கிறோம்...

நீண்ட பயணத்தின் நடுவில்
பளீர் என்று ஒரு மின்னல் கீற்று.

ஒரு கண மின்னல் ஒளியில்
தொலை தூரத்தில்
அடர்ந்த மரங்களின் பின்னால்;

தன்னைத் தானே
மறைத்த வண்ணம்
உண்மை ஒரு கரிய உருவமாய்
எட்டிப் பார்ப்பது போலத் தெரிகிறது...

அவ்வளவு தான்!
பின்னர் மீண்டும் அதே காரிருள்...

நாம் மீண்டும்
தட்டுத் தடுமாறி
நடக்க ஆரம்பிக்கிறோம்...

சிந்தனை மட்டும்
கரும்புள்ளியாய்

தொலை தூரத்தில் தெரிந்த
உண்மையை சுற்றிச் சுற்றி வருகிறது....

உண்மையில்
உண்மையின் உண்மையும்
தொலை தூரத்தில் தெரியும்
ஒரு கரும் புள்ளி போலவே இருக்குமா?

அவள் இப்போது என்னை வினவுகிறாள்!

உண்மையைச் சொல்
உண்மையை நீ முழுமையாகப் பார்த்தாயா?

உண்மையைச் சொல்
உண்மை என்ற சொல்லின்
பொருளை அறிவாயா?

உனது பேச்சும்
செயலும் உண்மையானதா?;

என்று அடுக்கடுக்காக
வினாக்கள் வந்து விழுகின்றன...

அந்த இரவின் இருளிலும்
அவளின் விழிகளின் ஒளி
என் விழி வழி வந்து
எனது மனதினைத் தொடுகிறது....

என் பிரிய சகி!
உண்மையைச் சொல்கிறேன்
உண்மையாக
உண்மையை மட்டும்
என்னால் பேச முடிவதில்லை...

காரிருள் சூழ்ந்த பாதையில்
தட்டுத் தடுமாறி நடந்து செல்லும் போது;

ஒரு கண மின்னல் கீற்றில்
கரும்புள்ளியாய் நான் கண்ட
உண்மையை
என்னால் எவ்வாறு விபரிக்க முடியும்?

அதனால்
உண்மையைச் சொல்கிறேன்
என் பிரிய சகி!

உண்மையாக
உண்மையை மட்டும்
என்னால் பேச முடிவதில்லை...

அவ்வாறெனின்
“நான் எதனைப் பேசுகிறேன்“ என்று
நீ வினவக் கூடும்!

“இன்னும் சொல்கிறேன் கேள்
என் பிரிய சகி!“

உண்மையை உரத்துப்
பேச வேண்டிய பல தருணங்களில்
காலம் என்னை ஊமையாக்கி விடுகிறது...

உண்மை என்பது
தென் துருவம் என்றால்
பொய் என்பது வட துருவம்...

பொய்யிற்கும்
உண்மைக்கும்
இடையிலான பயணத்தில்
நூறு நூறு தரிப்பிடங்கள்..

பொய்யிலிருந்து
உண்மையை நோக்கி...

காரிருள் சூழ்ந்த பாதையில்
நாம் தட்டுத் தடுமாறி
நடந்து கொண்டிருக்கிறோம்

கொட்டும் பெரு மழை ஒரு புறம்
காதைப் பிளக்கும்
இடி முழக்கம் மறு புறம்;

நேரத்துக்கு நேரம்
வெட்டும் மின்னல்கள் வேறு...

உன்னுடன் பேச
நெஞ்சம் நிறைய ஆசைகளை
அடைக்க முடியாமல்
அடைத்து வைத்திருக்கிறேன்...

இந்தக் காரிருளிலும்;

உயிர்ப்புடன் இருக்கும்
உள்ளத்து உணர்வுகளுக்கு
நான் உண்மையாக இருக்கிறேன்...

ஒற்றையடிப் பாதையில்
தட்டுத் தடுமாறி
நடந்து செல்லும் பயணத்திலும்;

உன் மீது கொண்ட உயிருக்கு
உயிரான காதலுக்கு
உண்மையாக இருக்கிறேன்.

மொழிகளில் எழும்
ஒலிகளில் தாம்
உண்மை, பொய் என்ற பேதங்கள்.

காதல் என்ற வேதம்
உயிருடன் உயிர் கலப்பது



உயிர் மூச்சு இருக்கும் வரை
உன் கரத்துடன்
என் கரம் பற்றி உன்னுடன் கூட நடப்பது

நான் பேசப் பேச
அவள் கரம் என் கரத்தை
மென்மையாக இறுக்க ஆரம்பிக்கிறது.

என் மீது சாய்ந்தவாறே
என்னுடன் அவள் நடந்து வருகிறாள்...

நீண்ட நெடும் பாதையில்
எமது பயணம் தொடர்கிறது...

## 6. காதல் பொன்வண்டு

அது
எனது ஊரின்
ஒரு பக்க எல்லை

அங்கு
அடர்ந்து
வளர்ந்ததோர்
இலந்தை மரம்

பரந்து வளர்ந்த கிளைகளும்
பச்சைப் பசேல் என்று இலைகளும்
இலைகளை மறைக்கும் பழங்களுமாக...

அடர்ந்து
வளர்ந்ததோர்
இலந்தை மரம்

பச்சைப் பசேல்
என்ற இலைகளில்
மறைந்தும் மறையாது
வாழும் என் காதல் பொன்வண்டு...

மொழு மொழு என்ற தோற்றம்
தக தக என்ற ஜொலிப்பு
பசும் பொன்னிற மேனி
வாளிப்புடன் கூடிய இளமை
சித்திரத்தில் எழுதிய சிங்காரச் சிறகுகள்

இலந்தை இலைகளின்
ஊடாய் மின்னும் கண்களில்
வழியும் காதல் பிரவாகம்

எனது
நெஞ்சமெல்லாம்
நிறைந்து நிறைந்து
காதல் நதியில் முக்குளிக்க வைத்தது

அந்த வழியில்
வரும் போதும் போகும் போதும்
கண் எறிவதும் காதல் கல் எறிவதும் என்று

காதல் நதி
மெல்ல மெல்ல
வளைந்து வளைந்து
வளர்ந்து கொண்டிருந்தது

என் காதல் பொன்வண்டு
வாழும் இலந்தை மரம்
என்னுயிர் மகிழும் உறவு என்றானது

ஒரு நாள்
மதியப் பொழுது
எரிக்கும் வெய்யில்

காதல் பொன்வண்டை
நான் தேடி வருகிறேன்

அன்று
அதிசயமாய்...

என் வரவை
பார்த்துப் பார்த்து
காத்திருந்தது போல

என் காதல் பொன்வண்டு
மரத்தின் இலைகளில் இருந்து
தன் சிங்காரச் சிறகுவிரித்து

முதல் முதலாய்
என் தோளில் வந்தமர்கிறது
அதீதமான காதலுடன்...

என் காதோரம் வந்து
ஒரு ரீங்கார மொழியில்
ஏதோ தன் செய்தி சொல்கிறது

நானோ
பொன்வண்டின் பேரழகில்
புத்தி பேதலித்துப் போயிருந்தேன்

என் காதுகளில்
என்  காதலின்
வார்த்தைகள் விழவேயில்லை

வைத்த கண் வாங்காமல்
பார்த்தது பார்த்தவாறே
பரவசத்தில் அமிழ்ந்திருந்தேன்

எனது நெஞ்சத்தில்
தனக்குத் தஞ்சம் தருமாறு
கொஞ்சும் மொழியில் கெஞ்சியது
ஏனோ என் சிந்தையில் சிக்கவில்லை

காதலின்

ஏக்கத்தைப் புரியாது
பொன்வண்டின் அழகை

அணு அணுவாய் ரசித்து ரசித்து
அனுபவித்துக் கொண்டிருந்தேன்

பின்னர்!
பிரிந்து வரும் பொழுது...

எந்தன் காதல் பொன்வண்டை
எடுத்து இலந்தை இலைகளில்
பக்குவமாக வைத்து விட்டு நகர்கின்றேன்

தன் கருவிழிகளால்
அன்று என்னை இறுதியாகப்
பார்த்த பார்வையை எண்ணுகையில்...

இன்னும்
எனது நெஞ்சை
கொலைவாள் கொண்டு
கீறி விடுவது போல் வலிக்கிறது

அடுத்த நாள்...
அதே காதல் தவிப்புடன்
இலந்தை மரம் நோக்கி நான் போக...

இது
என்ன கொடுமை!!!

இலந்தைமரம்
எரிந்து சாம்பலாகிக்
கொண்டு இருந்தது

மக்கள்
சுற்றிச் சுற்றி நின்று
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்...

எங்கே
எனது காதல் பொன்வண்டு?

எங்கே
எனது உயிரின் மறுபாதி?

எங்கே
எனது சந்தோஷ சாம்பிராஜ்யம்!

ஆயிரம்
ஆயிரம்
வினாக்கள் மனம் முழுவதும்....

விடைகளைத்
தேடிக் கொண்டே இருந்தேன்

தேடித் தேடி
தென் துருவத்தில் இருந்து
வட துருவம் வரை வந்தாகி விட்டது



நூறு நூறு
நெருப்பாற்று
யுகங்கள் கடந்தாகி விட்டது

தேடல் மட்டும்
தொடர்ந்து கொண்டே இருந்தது...

சிலந்தி வலையில்
சிக்கித் தவித்துக் கொண்டிருந்த
என் காதல் பொன்வண்டை
மீண்டும் நான் கண்டெடுக்கும் வரை...

என்னதோர் அதிசயம்!

இத்தனை
நெருப்பாற்று
யுகங்களின் பின்னும்...

சிலந்தி வலையில்
சிக்கிச் சின்னாபின்னமான போதும்...

இன்றும்
அந்தக் கருவிழிகளில்
அதே காதல் பிரவாகம்...
முன்னர் பார்த்தது போல்...

## 7. உனது பெயர் என்பது

ஒரே கண
ஒற்றைப் பார்வையில்
எவ்வாறு இவ்வாறு
என்னை உன்னில் உருக வைக்கிறாய்...

இந்த
ஒரே ஒரு வினாவை
ஓராயிரம் தடவை

என்னை நானே வினாவி வினாவி
சலித்துப் போய் விட்டது
விடை காண முடியாமல்...

எனது நாட்குறிப்பின்
முதற்பக்கத்தில் - அன்று
உனது பெயரை எழுதி வைத்தேன்

முதல் தரம்
உனது பெயரை அறிந்த பொழுது
அதனை நான்
மறந்து விடக்கூடாது என்பதற்காக...

இன்று
உனது பெயர் தவிர
எனக்கு வேறு எதுவும் நினைவில் இல்லை...

நான் யார்
எனது பெயர்
என்ற விபரங்கள் உட்பட...

உனது பெயரை
ஒரு மாபெரும் கவியரங்கில்
மெல்ல உச்சரித்தேன்

காலத்தால் அழியாத
ஓர் அற்புதக் கவிதை என
அவையோர் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர்

மழையுடன் கூடிய ஒரு மாலை நேரம்
உனது பெயரை
நீண்ட அந்த நீல வானத்தில் எழுதினேன்

வர்ண ஜாலங்கள் நிறைந்த
ஒரு வானவில்லாக வளைந்து நின்றது

மூன்று திசையும்
கடலால் வளைக்கப்பட்ட
எமது ஊரின் வெண் கடற்கரை மண்ணில்
உனது பெயரை எழுதினேன்

கடலலைகள் ஓடி ஓடி
வந்து வந்து முத்தமிட்டு முத்தமிட்டுச் சென்றது

சிறகு விரித்து வானில் பறந்து செல்லும்
பறவைகளுக்கு
உனது பெயரை உச்சரிக்கக் கற்றுக் கொடுத்தேன்

பதிலுக்கு
சிறகுகள் இன்றியே - கற்பனை வானில்
சிறகடித்துப் பறக்கும் வித்தையினை
பறவைகள் எனக்குக் கற்றுக் கொடுத்தன...

நாளாக நாளாக
எனக்கு இப்பொழுது எல்லாம்
எதற்கும் நேரம்
போதாமல் போய் விடுகிறது

ஒவ்வொரு நாளும்
நாளில் உள்ள

ஒவ்வொரு மணித் துளியும்
மணியில் உள்ள
ஒவ்வொரு நிமிடமும்
நிமிடத்தில் உள்ள
ஒவ்வொரு கணப்பொழுதும்

உனது பெயரை
உள் மனதுக்குள் உச்சரித்து உச்சரித்து
எனது உயிர் மூச்சை உள்ளிழுக்க
எனக்கு இப்பொழுது எல்லாம்
எதற்கும் நேரம்
போதாமல் போய் விடுகிறது

இறுதியாக
நீ அறிய வேண்டியது
என்று ஒன்று உண்டு...

உனது பெயர் என்பது
உனது பெயர் மட்டும் அல்ல
எனது உயிரின் உயிர் என்று அறிக

எனது இதயம் துடிப்பதே
உனது பெயர் என்ற
ஓர் ஒற்றை ஒலியை
உச்சரிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே...

எனது இதய உச்சரிப்பினை
உனது இதயம் உணராத ஓர் தருணம்
உயிர்த் துடிப்பினை எனது இதயம்
துறந்து விட்டது என்று நீ புரிக

## 8. யார் இவன்....

ஓர் பட்டாம் பூச்சியாய்
சிங்காரச் சிறகு விரித்து
நான் உலா வந்த காலம்

ஏதோ
கனவுகளில்...

ஏதோ
அவன் நினைவுகளில்

காதல் வானில்
சிறகு விரித்துப்
பறந்து கொண்டிருந்தேன்...

என்னை மறந்து
பறந்து பறந்து
தொலைவாய்ச் சென்று
தொலைந்து போனேன்

வந்த வழி மீள
வகையின்றி
அலைந்து அலைந்து
சலித்துக் களைத்து

விரித்திருந்த
சிலந்தி வலையில்
நானே சென்று சிக்கிச் சிதைந்து
சின்னா பின்னம் ஆனேன்

கொடிய சிலந்தியின்
பிடியில் வீழ்ந்த பின்னும்

இளமைக் காலமெல்லாம்
நரக இருளில்
வீணாய்க் கரைந்த போதும்...

அவன்
கண்களில் வழியும்
அந்தக் காதல் வெளிச்சம்
என்றும் என் நினைவில்...

அவன் நினைவுகள்
எனது
துருவ நட்சத்திரமாய்
நம்பிக்கைப் பயிரை
உயிர்ப்புடன் பேண உதவியது

கல்லாகச் சபிக்கப்பட்ட
அகலிகையை மீட்க
ஓர் இராகவன் வந்தான்

சளுக்கர்களிடம்
சிக்கிய சிவகாமியை மீட்க
பல்லவன் நரசிம்மன் வந்தான்

சிலந்தி வலையில்
சிக்கிச் சிதைந்து
மாய இருந்த என்னை

ஏழு மலை தாண்டி
ஏழு கடல் தாண்டி
மீட்க அவன் வந்தான்

நான்
வேள்வித்தீயில்
வெந்து கொண்டிருந்தேன்

நெருப்பாற்றில்
நீந்தி வந்து
நரகத்தின் வாயிலிலிருந்து
என்னை மீட்டு எடுத்தான்

ஓர் மகாராணியை
சுமந்து வரும்
ஒரு மெய்க்காவலனாய் - என்னை
தன்னிரு தோள்களில் சுமந்து சென்றான்

அனுபவித்த
துயரங்கள் எல்லாம்
மறந்து போனது

மனதின் பாரங்கள் எல்லாம்
தொலைந்து போனது

ஒரு சிறு குழந்தையாக
சுற்று முற்றும்
வேடிக்கை பார்த்தவாறு வந்தேன்

பாதையெல்லாம்
பவளமலர்கள் தூவி இருந்தது
தன் காதலைக் கவிமலர்களாகப் மென்மையாகப் பாடிக்
கொண்டே வந்தான்

பயணத்தின்
நடு வழியில்
ஒரு தடவை
தன் பாடலை நிறுத்தினான்

தொடர்ந்து பாடு
உன் கவிதைகளை
என்று வேண்டினேன்
கண்ணோரம் கசியும் கண்ணீர்த் துளிகளுடன்

உன் இதழோரம் சிந்தும்
தேன் எடுத்து
நான் கவி எழுதலாம்

உன் கண்ணீர் கண்டு
கவி எழுத
கல் அல்ல என் மனம் என்றான்

செந்தாமரையாய்
மலரும் உன் முகம் பார்த்துப் பார்த்து
மகிழ்ந்த என் மனம்

வாடி வதங்கிய
முல்லைச் செடியாய்
உலவும் உன்னைப் பார்த்து
எவ்வாறு கவி எழுத என்றான்

இவன் வினா
என் மனம் வரை
வந்து தொட்டது

இத்தனை காலமும்
அடக்கி வைத்த
அத்தனை கவலைகளும்
ஒரு நொடியில் வெடித்துச் சிதறியது

இவன் யார்
எங்கிருந்து வந்தான்
எங்கு அழைத்துச் செல்கிறான்

சொர்க்கம்
செல்லும்
ஓர் மார்க்கம் அறிந்தவனா இவன்

ஓர்
ஒற்றை வார்த்தையில்
என்னை எவ்வாறு கரைய வைக்கிறான்

காதல் மொழியை
இவ்வாறு எவ்வாறு
கசடறக் கற்று வைத்திருக்கிறான்

எவ்வாறு
இவனை எண்ண

எனது
தோழன் என்பேனா

எனது
உயிர்க் காவல் என்பேனா

தந்தையும்
தாயும் இணைந்து
தந்தையும் தாயுமானவனா

தன்னை
என்னில்
கலந்து கரைந்த
ஓர் உறவாகி என்னுயிரானவனா

எனது
சுவாசக்காற்றை
அண்ட வெளியில்
கொண்டு போய்
மறைத்து வைக்கட்டும்

இனி எனக்குக்
கவலை இல்லை

காரணம்...
நான் சுவாசிப்பது
வெறும் காற்றை அல்ல
இவனது கட்டுக்கடங்கா காதலை

இந்த உலகமே
எனக்கு எதிராய்
வந்து அணி திரளட்டும்

இனி
எனக்குக்
கவலை இல்லை

காரணம்...

ஒரு காதல் உலகத்தையே
இவன் சாசனம்
செய்து தந்திருக்கிறான்

## 9. தென்றலைத் தீண்டிய வேளை

அழகான
ஓர் நந்தவனம்

வளைந்து
வளைந்து செல்லும்
ஒரு நீளமான பாதை

இரு மருங்கிலும்
நீண்டுயர்ந்த மரங்கள்

என்னுடன்
நீ நீள நடக்கிறாய்

எனது
கரம் பற்றி
ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
சிறகடித்து நீ மெல்லப் பறக்கிறாய்

சிரித்துச் சிரித்து
சிவந்த உனது முகம்
எங்கோ என்னை அழைக்கிறது

அடங்கா ஆசைகள்
ஆர்ப்பரிக்கும் அலைகளாய்...

உன்னை
இரு கைகளாலும் அள்ளி
அணைத்தவாறு

சிறு பிள்ளை போல
தூக்கியவாறே நடக்கிறேன்

இல்லை
இன்பம் என்ற
தென்றலில் மிதக்கிறேன்

எனது
கழுத்தை இறுக அணைத்து
எனது காதோரம் மெல்லக் கூறுகிறாய்...

எனது சுவாசம்
என்பது
உனது நேசம் என்றறிவாய் என்று...

புற்களில் தேனருந்திக்
கொண்டிருந்த தேன் சிட்டுக்கள்

நீ கூறிய வார்த்தைகளை
மீண்டும் மீண்டும்
கூறிக் கொண்டே இருந்தனவே

உனக்கு
நினைவிருக்கிறதா
எனது பிரிய சகி...

## 10. அதே பார்வை

கல்லூரிக் காலத்தில் காதலைச் சரிவரக் கற்றுத் தேறாத இருவரை காலம் கடந்து சந்திக்க வைக்கிறது காலம்.

அவளின் சிந்தனைகளாக வரிகள் வடிவமைக்கப்படுகிறது...
***********

எத்தனை
எத்தனை யுகங்கள்;

எத்தனை
எத்தனை தவங்கள்;

காத்திருந்து
காத்திருந்து
ஏறக்குறைய எல்லாமே
தொலைந்து போய்விட்டது

எனது இளமையும்
இளமையின்
இனிய கனாக்களும் உட்பட...

இதோ!

இவன் இன்று
இப்போது என்னருகே...

பள்ளிப் புத்தகங்களை
நான் தூக்கி வந்த நாட்களில்
நாணத்தைக் கற்றுத் தந்த
அதே ஆசை ததும்பும் பார்வை

ஒரு புறம் நாணம்;
மறு புறம் ஆசை;

கண்ணோடு
கண் நோக்க முடியாது
மண் நோக்கும் வகை செய்தது...

என்னே என் மனம்!

நியாயத்தராசை
நிலை நிறுத்த முடியாமல்

மேலும் கீழுமாய்
ஆடிக்கொண்டே இருக்கிறது

பழைய சுவர்க் கடிகாரத்தில்
ஆடிக் கொண்டேயிருக்கும்
பெண்டுலம் போல...

கண்ணோரம்
காரணம் அறியாமல்
கசியும் கண்ணீர்த்துளிகள்;

ஏனோ
என் அம்மாவை
ஓர் கணம் எண்ண வைக்கிறது...

அதே ஆசை
ததும்பும் பார்வையுடன்

என்னைப் பார்த்துக்
கொண்டே இருக்கிறான் அவன்

## 11. காத்திரு காலம் வரும்.....

இங்கு இரவு...

அங்கு என்ன பகலா . . .
இல்லை
பகலும் இல்லாத
இரவும் இவ்வாத ஓர் பொழுதா...

உறக்கமற்று
நான் விழித்திருக்கும்
இந்த இரவினில் இங்கு
நினைவுகளில் - உன்னைச்
செதுக்கிக் கொண்டிருக்கிறேன்

நீ இப்போது அங்கு - என்ன
செய்து கொண்டிருக்கிறாய்...

கண்ணீர்த் துளிகள்
கன்னத்தை நனைக்க
விதியை எண்ணி எண்ணி
சலித்துக் கொண்டிருக்கிறாயா...

நாளை காலையில்
நாம் கண் விழிப்போம்
என்றதோர் நம்பிக்கையில் தானே
முதல் நாளிரவு உறங்கப் போகிறோம்

இரவு என்று
ஒன்று இருந்தால்
விடியல் என்று ஒன்று இருக்கும்

அற்ப முகில்களால்
எவ்வளவு காலத்திற்கு என்று
சூரியனை மறைத்து விட முடியும்...

இருள் நிறைந்த
இந்த இரவு கரைந்து

இனி வரும் நாட்களில்
இரவும் பகலும்
நகரும் ஒவ்வொரு கணமும்
உன் அருகில் தான் இருப்பேன்

அந்தத் தேனினும்
இனிய பொழுதுகளில்...

பெருமரம்
ஒன்றின் நிழலில்
அருகருகாய் அமர்ந்து கொண்டு

உன் விழியில் விழி கலந்து
உன் கொஞ்சு மொழியில்
என்னை நானே மறந்து

உன் எழில் மேனியை
இரு கரம் கொண்டு இறுக வளைத்து
உன் கார்குழலை - மெல்ல
என் விரல் கொண்டு விலக்கி
உன் காதோரம் என் உயிர் நீ என்று சொல்வேன்

## 12. எவர் எழுதிய தீர்ப்பு

உன்னைத் தேடிக்கொண்டே
நடந்து நடந்து
ஓர் யுகத்தின்
விளிம்பு வரை வந்தாயிற்று

இந்த விளிம்பிற்கு
அப்பால் இருப்பது
நரகமாகவே இருந்து விட்டுப் போகட்டும்

உன் பிரிவின் துயரை விட
இனி மேலதிகமாக
என்ன தான் இருக்கப் போகிறது

இந்தக் கணத்தில்
ஒரே ஒரு வினா
மனம் முழுவதும்...

என் செவிகளையே
செவிடாக்கும் வகையில்
உரக்க ஒலித்துக் கொண்டிருக்கிறது

எல்லாமே தலை கீழாக
எமது விதியை
எவன் எழுதியது

உனது வாழ்வு
அங்கு என்றும்
எனது வாழ்வு இங்கு என்றும்
தீர்மானம் செய்தது எந்த நீதி சாசனப்படி...

## 13. மல்லிகையாய் மலர்ந்த பொழுதில்

காதல் தந்த சுகத்தில் மல்லிகை மலர் தன் அனுபவத்தை மனம் விட்டுப் பேசுகிறது...
*******

மாலையில் மலர்ந்த
ஒரு மல்லிகை மலர் நான்

விரிந்த என் இதழ்களில்
வந்தமர்ந்த பட்டாம் பூச்சி நீ...

உதட்டுடன் உதடு வைத்து
முத்தமிட்டுக் கொண்டே;

காதலுடன் மென்மையாக
என் காதினில் வினவுகிறாய்
“காதல் என்றால் என்ன?” என்று...

என்ன என்று நான் சொல்ல
எனக்கு என்ன தெரியும்!

என்னால் மட்டும் அல்ல;
எந்த ஒருவரும்
காதல் என்றால் என்ன என்று
கூற முடியும் என்று
நான் நம்பவில்லை...

எனக்குத் தெரிந்தது எல்லாம்
உன் ஒருவனையே
நீ தான் எனது காதல்
நீ தான் எனது உயிர்ப்பு
நீ தான் எனது வாழ்வு
நீ தான் எனது உலகம்...

எனது காதல் என்ற ஓவியத்தை
வரையும் ஓவியன் நீயே

அந்த ஓவியத்தில் வர்ணங்களை
சேர்த்துச் சேர்த்து
அழகு செய்பவனும் நீயே

உனது ஒரு பார்வை
பரவசத்தால்
என்னை உருக வைக்கும்

உனது ஒரு சிறு தீண்டல்
இந்தப் பெண் பூவை
நாணத்துடன் மலர வைக்கும்

உனது மெல்லிய ரீங்காரம்
எனக்குள்ளே
இன்ப ஊற்றாய்
தேனைச் சுரக்க வைக்கும்

எனது கண்களால்
நான் காதலை தரிசிக்கவில்லை;

பதிலாய்; எனது உயிரில்
நீ உன்னை எழுதும் பொழுதில்

இன்ப மயக்கத்தில்
பாதி மூடி பாதி திறந்த
உனது கண்களில்
காதல் தரிசனம் தருகிறது

பாண்டவர்களின்
காண்டவ வனமாக
இருந்தது எனது மனது...

எனது இந்திரப்பிரஸ்தத்தை
உருவாக்கிய மயன் நீயே

எனது இந்திரப்பிரஸ்தத்தின்
எல்லைகளும்
உன்னாலேயே வரையப்படுகிறது...

அங்கு அமைந்த
மாடமாளிகைகளும்
கூட கோபுரங்களும்
பளிங்குப் பாதைகளும்
மாயா சபையும்;

பார்த்துப் பார்த்து
நீயாக நிர்மாணித்தது...

நான் ஒரு நிலவு
நீயே எனக்கு ஆதவன்;

உனது ஒளியின்
வெளிச்சத்தில் தான் எனது வாழ்வு

நீ மகிழ்வாகச் சிரித்தால்
அது எனது பகல்

நீ துயரத்தில் துவளும் போது
அது எனது இரவு...

வேறு என்ன சொல்ல;

காதல் என்பது ஒரு அனுபவம்!

அந்த அனுபவ ஆற்றில்
என்னை முக்குளிக்க வைத்தவன் நீ

இது தவிர வேறு
எனக்கு என்ன தெரியும்!

இறுதியாக;
உனது காதல் சொட்டும் தீண்டலில்
நான் கரையும் வேளையில் தான்
நான் உணர்ந்து கொள்கிறேன்
நான் ஏன் மலராக மலர்ந்தேன் என்று...

## 14. தோழி நீ நலமா

மனம் எல்லாம்
மரண வலி தோழி

எதனை
என்ன என்று சொல்ல

எல்லாமே...

எங்கோ
கை தவறிப் போய் விட்டது

எனது
சின்னச் சின்ன
சந்தோசங்கள் உட்பட

மாபெரும்
இலட்சியங்கள் வரை...

எல்லாமே...

எங்கோ
கை தவறிப் போய் விட்டது

ஊர் ஊராய்
தேடித் தேடி அலைகிறேன்

இந்த
நீல வானிலும்

நீங்கா
முழு நிலவிலும்
துள்ளும்
நீலக்கடல் அலையிலும்

எங்கும்
எதிலும்
எதனையும் காண்கிலேன்

இங்கு
இப்பொழுது
கரு இருள் சூழ்ந்த ஓர் இரவு

அங்கு
வெளிச்சம் நிறைந்த
ஓர் பகல் பொழுதா...

நீ இப்பொழுது
என்ன செய்து கொண்டிருக்கிறாய்,

நீயும் என்னைப் போல...

கடந்த கால
நினைவுகளுடன்
போராடிக் கொண்டு இருக்கிறாயா...?

இங்கு
பனியுடன் கூடிய குளிர்

உடல் வழி வந்து
மனதையும்
நடுங்க வைத்துக்
கொண்டு இருக்கிறது

அங்கு என்ன
எரித்து எறிக்கும் வெய்யிலா

எல்லாவற்றுக்கும்
மேலாய்...

அணி அணியாக
எண்ணற்ற
வினாக்கள் என் கை வசம்

உன் கைகளில்
என் வினாக்களுக்கான
விடைகள் இருக்கிறதா, தோழி

## 15. எனது கவிதை எனது மொழி

கவிதை என்பது
எனது மொழி!

கவிதை என்பது
இருள் படர்ந்த வழியில்
நான் நடக்க உதவும் ஒளி....

கவிதை என்பது
நான் சுவாசிக்கும் வளி

கவிதை என்பது
எனக்கு ஒரு பிரசவ வலி

கவிதை எனது
காதலின் வழி
*******

எனது கவிதை

எனது மனது
அறிந்த ஒரே ஓர் மொழி

உன்னுடன்
மனதோடு மனம் விட்டு
நான் பேசும் ஓர் மொழி
எனது கவிதை

எனது கவிதை
எனது கை வசம் இல்லாது
இருந்திருந்தால்...

நான்
பேசத் தெரிந்த
ஊமையாக இருந்திருப்பேன்

காதல் என்றதோர்
அஜந்தா ஓவியத்தை
உனது நெஞ்சினில் வரையத்
தூரிகையானது எனது கவிதை

உனது அழகு - என்றதோர்
இன்னுமோர் உலக அதிசயத்தை
வார்த்தையில் வடிக்க வகை செய்தது
எனது கவிதை

நீ அருகில் இருந்தாலும்
என் அணைப்பில் இருந்தாலும்

நீ நெருங்க முடியாத
தொலைவில் இருந்தாலும்...

உனது உயிரில்
எனது உயிரை எழுதும் பொழுதும்

உன்னைப் பிரிந்து - நான்
நரகத்தில் வாடும் பொழுதும்

எனது மனதைப்
படம் பிடித்துக் காட்ட
என் கைவசம் இருப்பது
எனது கவிதை...

எனது கவிதை
வீர மறவர் வழி வந்தது

உலகமே
ஒன்று திரண்டு
போர் தொடுத்தாலும்

எவருக்காகவும்
எதற்காகவும் - என்றுமே
தலை வணங்காது எனது கவிதை
உன் ஒருத்தியைத் தவிர...

எனது கவிதை
சத்தியத்தின் சத்தியமானது
பொய் என்ற பொருள் அறியாதது

உள்ளத்தின் உள்ளே உள்ள
உண்மை உணர்வுகளை
உன்னிடம் மெல்ல வந்து சொல்லும்

காதல் என்ற
கருப்பொருள் தவிர
வேறு எதனையும் பாடி அறியாது
எனது கவிதை

தன்னைச் சுற்றிச் சுற்றி
சூரியனைச் சுற்றி வரும்
இந்த பூமிப் பந்து போல

உன்னைச் சுற்றிச் சுற்றியே
எப்பொழுதும்
வலம் வந்து கொண்டிருப்பது
எனது கவிதை

யுகம் யுகமாய்
இந்தப் பிரபஞ்சம்
சேமித்து வைத்த இசைக் களஞ்சியம்
எமது உயிர்க் காதல்

கவிதை என்ற
குழல் கொண்டு
காதல் என்ற இசையினை
நான் மீட்டிக் கொண்டே இருப்பேன்

இந்த அண்ட சராசரங்களில்
உயிரினங்கள்
உயிர்ப்புடன் வாழும் வரை...

## 16. வடதுருவத்தில் வாழும் ஒரு பெருமரம் பேசுகிறது

வடதுருவத்தில் வாழும்
ஒரு பெரு மரத்தின் கதை இது...

அந்த மரம்
மனதோடு மனம் விட்டு
இங்கு தனது கதையைப் பேசுகிறது...

இனி இந்த மரம்
மனதோடு பேசுவதனை
நீங்களும் சற்றுக் கேளுங்கள்...

என்ன மரத்திற்கும்
ஒரு மனமா? என்று
விழிகளை நீங்கள் உயர்த்துவது
எனது மனக்கண்களில் தெரிகிறது...

எவர் சொன்னது
மரத்திற்கு மனம் இல்லை என்று...

உங்கள் எல்லோருக்கும்
உள்ளது போல...

உடலும் உள்ளமும்
உயிரும் உணர்வுகளும்
மரமான எனக்கும் இருக்கிறது.. ...

இன்னும் சொல்லப் போனால்...

மனித இனம்
தவற விட்ட மனிதத்துவமும்
மனிதரிடம் இல்லாத இளகிய மனமும்
இன்னும் எம்மிடம் மட்டும் இருக்கிறது...

நண்பர்களே!
கேளுங்கள் எனது கதையை...

நான் பண்பான பரம்பரையில் வந்தவள்
அன்பு என்ற இலக்கணத்தில் வாழ்பவள்
பேதங்கள் அற்ற பார்வை எனது வேதம்

காதலைக் கற்றுத் தர என்று
மண்ணில் பிறப்பெடுத்த
ஒரு அற்புத அவதாரம் நான்...

வனங்களில் வாழும்
ஒரு தேவதை நான்
எனக்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது....

காலத்திற்குக் காலம் பல நூறு பறவைகள்
எனது கிளைகளில் பிறந்து
இலைகளில் வளர்ந்து
சிறகு விரிக்கக் கற்றுக் கொண்ட
பின்னர் என்னைப் பிரிந்து பறந்து செல்லும்....

நான் எவரையும்
தேடிப் போவது இல்லை....

என்னை நாடி வந்தவர்
எவரையும் நான் விரட்டுவதும் இல்லை
அன்பு செலுத்த மட்டுமே அறிந்தவள் நான்

காதல் என்பது
எனது உயிருடன் உயிராகக் கலந்த
எனது உண்மையான உள்ளத்து உணர்வு...

கர்ணன் கவசகுண்டலத்துடன்
பிறந்தது போல

திங்களொடும்
செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
தமிழ் பிறந்தது போல

காதலுடன் கூடப் பிறந்தவள் நான்
காதலுக்காகப் பிறந்தவள் நான்

என்னை வெட்ட என்று
கோடரி கொண்டு வருபவர்களைக் கூட
எனது நிழலில் வரவேற்று உபசரிப்பது எனது காதல்...

அந்த அட்சயபாத்திரம் போன்றது
எனது காதல்
அள்ள அள்ளப் பெருகி வருவது எனது காதல்...

எனது காதல்
காதல் மீது மட்டுமே...

எனக்கு எனது கிளைகளின் மீதும் காதல்
கிளைகளில் வளர்ந்த
இலைகளின் மீதும் எனக்குக் காதல்

கிளைகளில் வாழும் பறவைகள்
மீதும் எனக்குக் காதல்

பறவைகள் கட்டும்
கூடுகள் மீதும் எனக்குக் காதல்...

கிளைகளில் வாழும்
அணில்களின் மீதும் எனக்குக் காதல்

எனது உடலினில்
பொந்துகள் செய்யும்
எலிகளின் மீதும் எனக்குக் காதல்...

எனது இலைகளை வருடும்
தென்றல் மீதும் எனக்குக் காதல்

எனது கிளைகளை ஒடிக்கும்
புயலின் மீதும் எனக்குக் காதல்...

பல பத்துப் பத்துப் பருவங்களை
நான் கடந்து வந்திருக்கிறேன்
பல பல ஆண்டுகளைக்
கடந்து வந்திருக்கிறேன்....

இதோ!
இப்போது
ஒரு கடும் குளிர் கொண்ட
வெண்பனிக்காலம்
என்னைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது

மேலே வானம்
வெண்பனிப் பூக்களைத் தூவித் தூவி
விளையாடிக்கொண்டே இருக்கின்றது

பனியின் பாரம் தாங்காமல் எனது இலைகள்
கிளைகளில் இருந்து பிரிந்து

மெல்லச் சிறகு விரித்துப் பறந்து பறந்து
தரையை முத்தமிடும் அந்த அழகு
அற்புதமான ஒரு கவிதையாக
எனது கண்களின் முன்னர் விரிகின்றது...

எனது கிளைகளில் தங்கியிருந்த பறவைகள்
என்னைப் பிரிய மனமின்றி
என்னைச் சுற்றி வானில் வட்டமிட்டு வட்டமிட்டு
கீச்சுக் குரல்களில் எனக்காக வருத்தம் தெரிவிக்கின்றன....

இந்தச் சின்னப் பறவைகளின்
கள்ளங் கபடம் அற்ற அன்பு
எனது மேனியைச் சிலிர்க்க வைக்கின்றது..

கவலை இன்றிச் சென்று வாருங்கள் என்று
எனது கிளைகளை அசைத்து
அந்தப் பறவைகளுக்குப் பிரியாவிடை தருகிறேன்

பாவம்! இந்தப் பறவைகள்...
இந்த வெண்பனிக்காலத்தின்
கடும் குளிரைத் தாண்டி அவற்றால் வாழ முடியுமா?
எனக்குத் தெரியும்
இவர்களை இனிமேல்
நான் மீண்டும் ஒரு முறை
சந்திக்கப் போவது இல்லை

சந்திப்புக்கள் என்னவோ
தற்காலிகம் ஆனவை தானே
பிரிவுகள் நிட்சயம் என்று
இருக்கும் கட்டத்தில்
நினைவுகள் மட்டும் தானே நிரந்தரமானவை!!!

எத்தனை எத்தனை வெண்பனிக்காலங்களை
நான் கடந்து வந்தாகி விட்டது?

இந்த வெறும் பனிப் புழுதி
என்னை எதுவும் செய்து விடப் போவது இல்லை

எனது வாழ்வை
முற்று முழுதாக நான் வாழ்ந்தாகி விட்டது...

இந்தப் பறவைகள் பயப்படுவது போல
இந்தப் பனிக்காலம் ஒன்றும்
எனது வாழ்வின் முடிவு அல்ல...

பனிக்காலம் என்பது
எனக்கு ஒரு இன்ப அனுபவம்...

நெருப்பாக எரிந்து கொண்டிருக்கின்ற
எனது நினைவு வேர்கள் வரை
சென்று குளிராகத் தீண்டும் ஒரு இன்ப அனுபவத்தை
எனக்குத் தருவது இந்த வெண் பனிக்காலம் தான்...

புத்தனுக்கு ஒரு போதிமரம்
மரங்களாகப் பிறந்த எங்களுக்கு
இந்த வெண்பனிக்காலம்...

தவமாய் தவம் இருந்து தவம் இருந்து
வாழ்வின் வெளிச்சத்தை
நாம் உணர்ந்து கொள்வதும்
இந்த வெண்பனிக்காலத்தில் தான்...

இந்த வெண்பனியுடன் கூடிய குளிர்
எனது வாழ்வின் அடுத்த அத்தியாயத்திற்கு
என்னை அழைத்துச் செல்கிறது...




மீண்டும் ஒரு வசந்தம் வரும்
மீண்டும் எனது கிளைகளில்
பச்சைப் பசேல் என்று இலைகள் தளிர்க்கும்

அந்த இலைகளை
மறைக்கும் வகையில்
கொத்துக் கொத்தாய் மீண்டும் பூக்கள் பூக்கும்

மீண்டும் கூடு கட்டி
வாழ்வதற்கு என்று
பலவிதமான பறவைகள் என்னைத் தேடி வரும்

எனது கிளைகளில் இருந்து
தம்மை மறந்து காதல் செய்யும்....

அந்த அற்புத உணர்வை
பார்த்துப் பரவசமாகிப் பரவசமாகி
என்னுள் நானே கரைந்து போவேன்...

இரவும் பகலும்
மாறி மாறி வந்து கொண்டே இருக்கும்
நாட்கள் மெல்ல மெல்ல
நகர்ந்து கொண்டே இருக்கும்

நான் எப்போதும் நானாகவே இருப்பேன்
அதே மாறாத காதலுடன்...

## 17. இவளுக்குள் இரு வேறு இவள்

விரலோடு விரல் கோர்த்து
கண் மயங்கி
என் தோளில்
இவள் சாய்ந்து இருக்கிறாள்

இவளது செல்லத்தனமான
சிணுங்கல்கள்
இன்ப ரசத்தைக் கூட்டி வருகிறது..

காற்றினில் பறக்கும்
இவள் கார்குழலும்
எனது கன்னத்தை ஆசையுடன்
வருடிக் கொண்டிருக்கிறது...

காதல் சொட்டும்
அவள் நீள் விழிகளை
உற்றுப் பார்க்கிறேன்...

வானவில்லின்
வர்ண ஜாலங்களில் இருந்து
வடிவெடுத்த ஒரு ஓவியப்பெண்ணா இவள்

நிலவு மங்கையின் எழிலையெல்லாம்
ஆடையாக அணிந்து கொண்டு
வானிலிருந்து பூமிக்கு
இறங்கி வந்த தேவதையா இவள்

இவளது வாழ்தல்
என்பது என்னவோ
இரு வேறு உலகங்களில்...

ஒன்று புறம் சார்ந்தது
மற்றொன்று அகம் சார்ந்தது

இரண்டும்
இரு வேறு துருவங்களில்...

புறம் சார்ந்த
இவளது உலகம்
மிக விசாலமானது

இவள் ஆயிரம் ஆயிரம்
விழுதுகள் கொண்ட
ஓர் பெரு ஆலமரமாகவும்

இவளைச் சுற்றி இருப்பவர்கள்
இவள் நிழலில் இளைப்பாறும்
பறவையினங்களாகவும்

தொடரும் புறம் சார்ந்த
இவளது உலக வாழ்தல்...

இங்கு வாழ்தல்
என்பதனை விடுத்து

கடமை என்றே
இவளது காலம் செல்லும்

இவளுக்குள் உள்ளே
உள்ள இவளை நினைக்கவே
இவளுக்கு ஏது நேரம் அங்கு...

அகம் சார்ந்த இவள் உலகம்
நானும் இவளும் மட்டும் வாழ்வது

எல்லைகள் அற்றது
தொல்லைகள் அற்றது..

வீசும் காற்றும்
பேசும் பேச்சும்
இவள் பெயர் சொல்லியே
கடந்து செல்லும்...

அரை நூறு வயதடைந்த
சின்னஞ் சிறு குழந்தை இவள்

எந்தன் தேசத்தின்
சர்வாதிகார மகாராணி இவள்...

குற்றேவல் புரியும்
இவளது மன்னவன் நான்

எமது தேசத்தின் சட்டங்களை
இவளே இயற்றுவாள்

இவள் இயற்றிய சட்டங்களை
தன் தேவைக்கேற்ப
இவளே மீறுவாள்...

ஓர் சிற்றெறும்பு
கடித்ததற்காய் அழுது
இவள் செய்த ஆர்ப்பாட்டங்களினால்

உலகிலேயே
அதி ஆபத்தானது
சிற்றெறும்பு என்று

எமது அரசாங்கம்
பிரகடனம் செய்தது,
இவளை சமாதானப்படுத்த..

வானில் மிதக்கும்
வெள்ளை நிற மேகங்கள் போல
பிள்ளை மனது இவளுக்கு

தேனில் கலந்த அமுதாய்
இனிமை வழியும் வாய்மொழி இவளுக்கு

என் ஊனில் கலந்த உயிராய்
கட்டற்ற காதல் இவளுக்கு...

இவ்வாறாக;

இரு வேறு
உலகங்கள் இவளது

புரிந்தும் புரியாத
ஒரு புதுக்கவிதை போல இவள்...

## 18. நீர் தடாகத்தின் ஓரம்

இருளுமின்றி
ஒளியுமின்றி
பகல் கரையும் அந்தி மாலை

நீர்
நிறைந்த
நீண்டதோர் நீர் தடாகம்

ஓரத்தில்
இருக்கும் படிகளில்
அருகருகே நாமிருந்தோம்

நீண்ட
நின் விரல்கள் நீவி
நீரில் விழுமுன்
நிழலழகில்
விழி தொலைத்து இருந்தேன்

வீசும் காற்றில்
பறக்கும் உன் கூந்தல்
சாமரம் வீசி
எனது முகத்தை மெல்ல வருடி விடுகிறது

மெலிதாய்
நீ விடும் மூச்சின் ஒலி
ஓர் இன்ப ஸ்வரமாய்
என் செவிகளில் வந்து விழுகிறது

உன் மேனியின்
நறுமணம்
என் நாசிவழி சென்று

என்னை உயர உயர
எங்கோ எடுத்துச் செல்கிறது

இந்த
ஓர் கண நேர
சுகத்திற்காகவே

இந்த உலகமும்
கோடானு கோடி கிரகங்களும்

எரிக்கும் சூரிய
பார்வையைப் பொறுத்துக் கொண்டு
பால்வெளியில் பொறுமையாக
சுற்றிக் கொண்டு இருந்திருக்கின்றன
கோடானு கோடி வருடங்களாக

## 19. பூங்காவனத்தில் அவனுடன்...

பூத்துக் குலுங்கும்
ஒரு பூஞ்சோலை

நிறம் நிறமான
விதம் விதமான பூக்கள்

இன்று
இவனுக்கு
என்ன ஆயிற்று...

ஓர் கணம்
என்னைப் பார்ப்பதும்...

மறுகணம்...

பூங்காவில்
பூத்துக் குலுங்கும்
பூக்களைப் பார்ப்பதும்

பூக்களையும்
என்னையும்
ஒப்பிட்டு ஒப்பிட்டு
வர்ணித்துக் கொண்டிருக்கிறான்

மனம்
இறக்கை
கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது
ஓர் புறம்!

இவன்
இன்று முழுவதும்



இவ்வாறு பேசிக்கொண்டே
இருக்க மாட்டானா
என்று எண்ணத் தோன்றுகிறது

மறு புறம்!

பொய்க் கோபத்துடன்
மறு பக்கம் பார்த்து
உட்கார்ந்து கொள்கிறேன்

இவன் வர்ணனை
இப்போது
எனது பின்னழகைப் பற்றி
வரி வரியாக வந்து விழுகிறது

முதுகுப் பக்கம்
இன்னும் இரண்டு காதுகள்
இருந்திருக்கக் கூடாதா
என்று எண்ணத் தோன்றுகிறது...

காதல்
நெஞ்சமெல்லாம்
நிறைந்து போயிருக்கிறது

இந்தக் காதல்....

இரு வேறு
கிரகங்களில் இருந்த எம்மை
அருகருகாய் அழைத்து வந்தது

உயிரற்ற உடலுடன்
உலவி வந்த எம்மை
உயிரூட்டி
உயிருக்கு உயிராய் உணரச் செய்தது

மகிழ்தல் என்பது
சேர்தலும் அல்ல
பிரிதலும் அல்ல
வாழ்தல் என்று அறிய வைத்தது..

## 20. யாரோ ஒருவரின்....

இப்பொழுது எல்லாம்
ஓர் கனவு...

எப்பொழுதும்
தோன்றிக் கொண்டே இருக்கிறது
ஓர் சில காலமாக...

இந்தக் கனவில்....

ஓர் பரீட்சை மண்டபம்

என்னுடன்
இன்னும் பல மாணவர்கள்

வினாத்தாள்கள் தரப்படுகின்றது

எல்லோரும்
அவசரம் அவசரமாக
பதில் எழுத ஆரம்பிக்கிறார்கள்....

சிலர்
அடுத்த அடுத்த
பக்கங்களையும்
புரட்ட ஆரம்பித்து விடுகிறார்கள்...

நான் மட்டும்- இன்னும்
பதில் எழுதத் தொடங்காமல்...

வினாத்தாளை
பார்த்துக் கொண்டே இருக்கிறேன்

வினாக்கள்
எதுவுமே புரியவில்லை

எனக்கு
அறிமுகம் அற்ற
ஏதோ ஒரு மொழியில்

எனக்குத் தெரியாத
ஏதோ ஓர் பாட நெறியில்
ஏதோ ஏதோ வினாக்கள்...

வினாக்களே விளங்காத
பொழுது
விடைகளை எவ்வாறு எழுதுவது...

வினாத்தாளை
வெறித்து வெறித்துப்
பார்த்துக் கொண்டே இருக்கிறேன்

பக்கத்தில் இருந்த சிலர்
விடைத்தாள்களை
ஒப்படைத்து விட்டு

மண்டபத்தை விட்டு
வெளியேறிக்
கொண்டு இருக்கிறார்கள்

நான் அறியாத விடைகளை
இவர்கள் மட்டும்
எங்கு கற்றுக் கொண்டார்கள்
என்று எண்ணிக் கொண்டே!

வினாத்தாளை
மீண்டும்
உற்றுப் பார்க்கிறேன்

ஓ!
இப்பொழுது தான்
நான் உணர்கிறேன்

இது
எனது
வினாத்தாள் அல்ல

எவருடையதோ
தவறுதலாக
எனக்குத் தரப்பட்டு இருக்கிறது

இந்த
உண்மையை
உணர்ந்த பொழுது...

பரீட்சை நேரம்
முடிவடைந்து விட்டது

இனி என்ன...
வெற்று விடைத்தாளை
ஒப்படைத்து விட்டு
வெளியே வருகிறேன்

எழுதாத
விடைத்தாளை வைத்து
எனது பெறு பேறுகள்
தீர்மானிக்கப்பட இருக்கிறது
என்ற கவலையுடன்...

இவ்வாறு தான்...

ஓர் கனவு
எப்பொழுதும்
தோன்றிக் கொண்டே இருக்கிறது...

## 21. மௌனம் எனது தவம்

இன்றைய
என் வாழ்தல்

விழி வழி சென்று
விண்மீன்கள் தீண்டல்..

நீ தந்து சென்ற
சுகத்தின் சுவடுகளை
எண்ணி எண்ணி மகிழல்...

மனதோடு மனம் விட்டு
மனதுக்குள்
உன்னோடு பேசல்

என்று எல்லாமே
தன்னந் தனிமையில்
எனது வாழ்தல் இன்று..

புத்தனுக்கு
ஓர் போதிமரம்
எனக்கு இந்தத் தனிமை....

தனிமை
என்பது என் பிரபஞ்சம் - எனக்காய்
நானே சிருஷ்டித்துக் கொண்டது

தனிமை என்பது
எனது தவம்....

உனது நினைவு
என்ற நெருப்பில்
வெந்து வெந்து வாழும் ஓர் தவம்

நூறாயிரம் மனிதர்கள்
எப்பொழுதும் சூழ்ந்திருக்கும் பொழுதும்

எனது
தனிமைத் தவத்தை
எவரும் கலைத்து விட முடியாது

சீன மதில்கள் போல்
நீண்டுயர்ந்த மதில்களை
என்னைச் சுற்றி
கட்டி வைத்திருக்கிறேன்

மௌனம் என்ற
கனத்த கல் கொண்டு...

கங்கா நதியை
பூமிக்கு எடுத்து வந்த
பகீரதப் பிரயத்தனம் போன்றது

மௌனத்தைத்
தாய் மொழியாக
நான் வரித்த ஓர் வரலாறு

பேரிரைச்சல் போன்ற ஒலிகளும்
வலிகள் தரும் வார்த்தைகளும்
நிறைந்து வழியும் பொய்களும்

மொழிகளை
வெறுக்கும் சினத்தைத் தந்தது
மௌன வேதத்தின் ஞானம் தந்தது

மௌனம்
பொய்கள் கலவா
மெய்யான ஒரு மொழி

வலிகள் தரும்
வார்த்தைகள் இல்லா
மென்மையான ஒரு மொழி

உன் உயிருடன் உயிராய் வாழ
மனதோடு மனம் விட்டுப் பேச
நான் கண்ட ஓர் தேவ மொழியது

எனது
மனதின் ரணங்களை
உனக்கு நான் காட்ட
நான் எடுக்கும் ஓர் selfie

வரையறைகளால்
சிறை பிடிக்க முடியா என் காதல்

வர்ணங்களால்
வரைய முடியா என் மன ஓசைகள்

வார்த்தைகளால்
வடிக்க முடியாத என் கவிதைகள்

என்று எல்லாவற்றையும்
உன் உயிரில் நான் எழுத
உதவும் ஓர் தூரிகை என் மௌனம்

தனிமைத் தவமிருந்து
மௌனம் என்ற வேதத்தில்
நான் தேடுமோர்
பிரணவப் பொருள் நீ என்றறிக.

## 22. புரியாத புதிராக...

எல்லாமே
இன்று புரியாத புதிராக...

இந்த
கூதிர் கால வருகையும்.....

பகல் பொழுதிலேயே
சூழ்ந்து வரும் இருளும்

மரங்கள்
தம் இலைகளின் நிறங்களை
மாற்றி மாற்றி
ஏதோ சமிக்ஞைகள் செய்வதும்...

அங்கு சின்னக் குருவிகள்
கூவிக் கூவி
ஏதோ செய்திகள் சொல்வதும்

எந்த உளியாலும்
உடைக்க முடியாத உறுதியான
கருங்கல் பாறை போல...
உன் அழுத்தமான மௌனமும்...

எல்லாமே
ஒரு புரியாத புதிராக இன்று

## 23. விதி செய்தல்

எல்லாம்
முதல் ஒரு கணப் பொழுதுக்குள்...

உந்தன் கருவிழிகளில்
என்னிரு விழிகள் கலந்ததும்
உன்னை வியந்து வியந்து
உன்னுள் நான் கரைந்ததும்...

அதன் பின்
என்னைக் கடந்து செல்லும்
ஒவ்வொரு கணப்பொழுதும்
உன்னை என்னுள்
பதிவு செய்தே செய்கிறது

உனதும்
எனதும்
யார் எவரின்
விருப்பமும் விருப்பமின்மையும்

உயிருடன்
உயிர் கரைதலை
இனி மாற்றுதற்கில்லை

எமது
இரு இமைகளும்
இறுதியாக மூடும் வரையிலும்

## 24. மேலான சம்மதம்...

ஓசையில்லாமல்
ஓர் பெரும் சமர்
நிகழ்ந்து முடிந்திருக்கிறது

கூட இருந்தவர்கள்
எதிராய் வந்தவர்கள் என்று...

புழுதி பறக்க
புரவியில் சென்றவர்

ராஜாவாக
ராணியாக
தங்கத்தேரிலே உலா வந்தவர்

எல்லோருமே
இன்று...

சென்ற இடத்தின்
தடயம் எதுவும் இன்றி
தொலைந்து போய்விட்டனர்

இறுதியாய்
இந்த மனித குலத்தில்
மீதமாய் உயிர்ப்புடன் இருப்பது
நானும் நீயும் மட்டும்...

பிரபஞ்சமே
மனிதர்கள் அற்ற
மனிதம் அற்ற
ஒரு மயானமாய் இன்று....

எத்தனை
எத்தனை
மகத்தான பணிகள்
மலை மலையாய் காத்திருக்கின்றன

மலர்களைப் பிரசவிக்க
மறந்து போயிருக்கும்
இந்த (நந்த) வனங்களுக்கு
மலர்களை மலர்விக்கும் இரகசியங்களை
கற்றுக் கொடுக்க வேண்டும்....

மனிதம் மறக்காத
ஓர் மனித குலத்தை
புதிதாய் தோற்றுவிக்க வேண்டும்

காதல்
என்ற ஓர் தேவ மொழியை
தேசிய மொழியாகக் கொண்ட தேசங்களை
பூமியெங்கும் ஸ்தாபிக்க வேண்டும்

இவற்றுக்கெல்லாம்
முதலில்
நான் நீட்டும் என் கரத்தை
பற்றிக் கொண்டு
என் கூட நீண்ட தூரம் பயணிக்க
நின் மேலான சம்மதம் வேண்டும்

## 25. உனது மத்தியஸ்தம்

மகா பாரதப் போர் போல
ஓர் மாபெரும் யுத்தம் - உன்னால்
எனக்கும் எனக்கும் இடையில் ....

இறுதியில்,
என்னால் நானே படு காயப்பட்டு
மரணப் படுக்கையில்...

இப்பொழுது
உனது வரவை
பார்த்திருக்கிறேன்
எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்

உனது மத்தியஸ்தத்தில்
என்னுடன் நானே
சமாதானம் பற்றிப் பேசுவதற்காய்....

இரவு இரவாய் விழித்திருந்து
நீ வரக்கூடிய திசையில் பார்த்துப் பார்த்து
எனது இரு கண்களும்
நெருப்பில் எரிந்து கொண்டிருக்கின்றன

## 26. சின்னதாய் உன் சிரிப்பு

உனது
பெயரை எழுதுகிறேன்
ஓர் அழகான கவிதை ஆகிறது

விரிந்த உனது விழிகளை
உற்று நோக்குகிறேன்

இதென்ன!

காதல் பூப்பூக்கும்
ஒரு நந்தவனம் அங்கு தெரிகிறது

வெறும் வார்த்தைகளுக்கு
இனி ஏது அர்த்தம்...

இதழோரம் சிந்தும்
உன் சின்னச் சிரிப்பில் இருக்கிறது
எனது வாழ்வின் அர்த்தம்...

உனது மூச்சு
எனது முகத்தைத் தீண்டும் கணத்தில்
தொடங்கும்
எனது வாழ்வின் சொர்க்கம்

## 27. கனவில் உன் கனவு

தனிமையும்
தவிப்பும்
இணைந்ததோர் இரவு

சாளரவழி
தொலைவில் தெரியும்
விண் மீன்களாய்

கண்மீன்கள்
தூக்கவலைவீசி
ஏக்கத்துடன் காத்திருக்கின்றன

விழித்திருக்கும்
இரு விழிகளில்
வியப்பாக எழும் ஓர் கனவு

எழுமந்த கனவினில்...

இருவிழி மூடி
நான் அங்கு
உறங்குவதாய் ஓர் காட்சி

இந்த உறக்கத்திலும்
வரும் ஓர் கனவு
அங்கும்
விழித்திருக்கிறது என் மனம்
கூடவே குறும்பான
உன் நினைவுகளும்...

**1.முதுவேனிற் காலம்**

இது என்ன..
இந்த வாழ்வின்
முதுவேனிற் காலமா…

பசிய இலைகள் போல
இருந்த பல பழக்க வழக்கங்கள்
உதிர்ந்து விழ ஆரம்பிக்கின்றன

நாளாக நாளாக….
என்னால்
இப்பொழுதெல்லாம்
பொய்யாக நடிக்க முடியாமல் இருக்கிறது….

கண்ணோரம் கசியும்
கண்ணீர்த் துளிகளையும்

உதட்டோரம் வெளிவரும்
சின்னச் சின்னச் சிரிப்பினையும்

எதற்காகவும்
எவருக்காகவும்

திரை போட்டு
மறைக்க முடியாமல் இருக்கிறது…

ஏதோ ஒரு வேகத்தில்
பேசி விட்ட பொய்களைக் கூட

நீண்ட நாட்களுக்கு
காப்பாற்ற முடியாமல் இருக்கிறது…

முன்னர் எல்லாம்
எவை எவை தேவை என்று
இருந்ததுவோ
அவை எல்லாம் இன்று
தேவையற்றதாகி விடுகிறது….

பல சந்தர்ப்பங்களில்
மற்றவர்களுடன் பேசுவதனை விட...
எந்தன் மனதுடன்
பேசிக் கொண்டு இருப்பதே
ஆறுதலாக இருக்கிறது...

எனக்காக
நான் வாழ்வதற்கே
எனது வாழ்வு போதாமல் இருக்கிறது

என்னால்
என்னைத் தவிர

என்னுள்
வேறு எவரினதும்
விருப்பு வெறுப்புக்களை
ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது...

இது என்ன..

இந்த வாழ்வின்
முதுவேனிற் காலமா...

## 28. கடலலைகளும் நீயும்

இந்தக் கடலலைகளும்
என்னவோ
உன்னைப் போலவே...

ஓடோடி வந்து
கரைகளை மெல்லத்
தொட்டு அணைப்பதும்
பின்னர் மெல்ல நழுவி மறைவதும்...

மீண்டும்
அளவற்ற ஆசையுடன்
ஓடோடி வந்து அணைப்பதும்...

என்று
வற்றாத ஓர் நீர் ஊற்றாய்

என்றும்
ஒரு தீராக் காதல்
உனக்கும் இந்தக் கடலலைக்கும்

## 29. சின்னஞ் சிறு வயதில்...

சின்னஞ் சிறு வயதில்
நாங்கள் அருகருகாய்
இருக்கையில்...

வெறும்
வேடிக்கையாய்
தொடங்கியது இந்த விளையாட்டு....

அன்று!
நடுவில் ஓர் மரம்...

இன்று!
மரத்திற்குப் பதிலாய்
சுற்றிலும் உறவுகள்......

வேடிக்கையாய்
மரண வேதனையாய்....
விளையாட்டு மட்டும் தொடர்கிறது

# 30. வாழ்வு உயிர் பொருள் நீ

இன்று....

ஒரு தினம்....

முதல்
முதலாய்
உன் முகம்
என் அறிமுகமான ஓர் தினம்

நெஞ்சில்
ஊர்வலமாய்
ஓராயிரம் எண்ணங்கள்

ஜென்மம்
ஜென்மமாய்
தொடர்ந்து வரும்
ஓர் நீண்ட பயணம்

இருவரும்
கரம் பற்றி
நடந்து வந்திருக்கிறோம்

வளைவு
நெளிவுகளுடன் கூடிய
அழகிய நந்தவனங்கள்
நிறைந்ததோர் பாதையில்....

நிறைந்து
நிறைந்து
வழிகிறது
மனம் முழுவதும்

நீ
எனக்காய்
வாரி வாரி வழங்கிய
காதல் சொர்க்கங்கள்

என்னை
உன்னுயிரில்
எழுதிய பின்னரே

எனக்கு
உலகத்தின் விலாச
விசாலங்கள் தெரிந்தது

உனது
உலக விலாச
விசாலங்கள்
என்னுள் தொலைந்து போனது

என்னை
முழுமையாய்
விளங்கியவன் நீ

உடலும்
உணர்வும்
உயிரும் உட்பட...

என்னை
முழுமையாய்
விழுங்கியவன் நீ

காற்றில்
மிதக்கும்
ஓர் சருகாக நான்

புயலும்
அசைக்கவொண்ணா
பெருத்ததோர் அரசமரமாக நீ

நான்
மிகவும்
அமைதியாக இருப்பேன்
இறுதி வரை....

நீ
மிகவும்
ஆர்ப்பாட்டம் செய்வாய்

நான்
அமைதி
காக்கும் வரை.....

வாழ்வை
முழுமையாக
வாழ வேண்டும் என்று
துடிப்பாக இருப்பவன் நீ

வாழ்வை
செழுமையாக
வாழவேண்டும் என்று
துடிப்பாக இருப்பவள் நான்

நீ ஒரு செலவாளி;

சுதந்திரத்தையும்
சுதந்திரமாக
செலவு செய்ய நினைப்பவன் நீ...

நான் ஒரு நல்ல நெசவாளி;

சுதந்திரத்தையும்
பார்த்துப் பார்த்து
சேர்த்து வைப்பவள் நான்

நீ வட துருவம்
நான் தென் துருவம்

ஒவ்வாத துருவங்கள்
ஒன்றை ஒன்று ஈர்க்கும்
என்ற தத்துவம் உண்மையானது

நீ மனம்
போன பாதையில்
நடந்து செல்பவன்

நான்
நின் நிழல் போகும்
பாதையில் நடந்து வருபவள்

என் கண்களில்
தூசு விழும்

உன் கண்களில்
கண்ணீர் வரும்

உன் வாழ்வை மறந்து
என் வாழ்வில் கலந்தவன் நீ

நான் பேசினால்
உனக்கு அது கவிதை என்பாய்

என் புன் சிரிப்பு
உன் மன மலரை
வருடி வரும் தென்றல் என்பாய்

முழு நிலவில்
நிலவொளியில்
கண் மயங்கி பேச்சிழந்து
என் முகமலரைப் பார்த்தபடி பார்த்திருப்பாய்

அந்த
உன் பார்வையில்
நீ பேசும் மௌனத்தில்

ஆயிரம் ஆயிரம் கவிதைகள்
என் மயிர்க்கால்களையும்

என் உயிர்ப் பூக்களையும்
மயிலிறகு கொண்டு வருடிச் செல்லும்...
இன்பமான ஓர் இரவினில்
நெருக்கமாய் நீ இருந்து
என் காதுகளில் கிறக்கமாய்
என் பெயர் கூறி அழைக்கையில்

பேதை
என் உயிர் உருகி
பெண்ணாய் நான் பிறந்த பயன்
இதுவென்று நான் உணர்வேன்.

## 31. மனம்

நண்பி சௌந்தரி கணேசனின் வானொலித் தலைப்பைப் பார்த்ததன் பின்னர் எழுதியது....

மனம்
எனக்குள்
இருக்கும்
எனது மறு பாதி

நான் என்பது
நான் வாழும் வீடு

எனது வீட்டில்
எனது மனம் என்பது
எனது ஓர் அறை...

அந்த அறை
சில சமயங்களில்
பூஜை அறையாக இருக்கும்

சில சமயங்களில்...

அந்த அறை
அந்தக் காலத்து
அந்தப்புரமாக இருக்கும்

சில சமயங்களில்...

எரி நெருப்பில்
என்னை உயிருடன் போட்டு
வாட்டி எடுக்கும்
ஒரு சித்திரவதைக் கூடமாக இருக்கும்....

சில சமயங்களில்...

வெளிப்படையாகச்
சொல்ல
கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது

சில சமயங்களில்...

எனது மனம் என்ற
அந்த அறை

அருவருப்பான
ஓர் கழிவறையாக இருக்கும்...

என்ன செய்வது...

அங்கு இருக்கும்
அசுத்தங்களை அகற்றி...

மீண்டும்
என்னை நானாக மாற்ற
நான் ஊசிமுனையில்
தவம் இருக்க வேண்டி இருக்கும்

எனது மனதின்
உருவம்
எனக்குத் தெரியாது...

அது
ஆணா அல்லது பெண்ணா
என்றும் எனக்குத் தெரியாது..

அது அழகானதா
அல்லது அவலட்ஷணமானதா
அதுவும் எனக்குத் தெரியாது

நான்
பேசப் பழக முன்னரே

நான் பேச
ஆரம்பித்தது
எந்தன் மனதுடன் தான்..

எனது மனம்
என்னவோ வினோதமானது

நான் தனியாக
இருக்கும் போதும்

சபை நிறைந்த
மனிதர்கள் மத்தியில்
இருக்கும் போதும்

ஓயாமல்
பேசிக் கொண்டே இருக்கும்

எனது வாழ்வில்
என்னுடன் அதிகம் இருப்பது
எனது மனது மட்டுமே

எனது மனதுடன்
பேசும் மொழி சத்தங்கள் அற்றது
சந்தங்கள் மட்டும் அங்கு இருக்கும்

எனது மனதுடன்
நான் பேசுவதற்கு
இலக்கணங்கள் இருப்பது இல்லை

கம்பனும்
செல்லியும் சொல்லாத
இலக்கியங்களை எனது மனம் பேசும்..

எனது மனம்
என்னுடன்
பெரும்பாலும் நட்பாக இருக்கும்

நெருப்பாறுகளை
நான் தாண்ட வேண்டி

வந்த பொழுதுகளில்...

நான் எரிந்து விடாமல்
காப்பாற்ற . . .

நீரூற்றாக எனது மனம்
எனக்குத் துணையாக எனது பக்கம் நின்றது...

ஆனால்

நூறு நூறு உறவுகள்
சூழ்ந்து இருக்கும்
மகிழ்வான பொழுதுகளில் கூட

கூட இல்லாத
அவளை அழைத்து வந்து
மனதுக்குள் என்னைக் கதறி அழ வைக்கும்

எனது பரம விரோதி போல
கட்சி மாறி
அவள் பக்கமாய் போய் நிற்கும்..

நான்இருக்கும்
எனது திசையையே
பார்க்க மாட்டேன் என்று
அவளுடன் நின்று கொண்டு
அதிகம் அடாவடித்தனம் பண்ணும்

பின்னர்..

அதனை
சமாதானப்படுத்தி
மீண்டும் நட்பாக்கிக் கொள்ள

நான் படும் பாடுகள்
நான் மட்டும் அறிந்தவை...

இப்படி...

எனது மனம் என்பது
எனக்குள் இருக்கும்
எனது மறு பாதி

## 32. கனவு

நண்பி சௌந்தரியின் வானொலி நிகழ்விற்காக கனவு என்ற தலைப்பில் எழுதியது......

மற்றவர்கள்
தூங்கும் போது
கனவு காண்பார்கள்..

நானோ
கனவு காண்பதற்காகவே
தூங்கப் போனவன்...

எந்தன்
கனவு கலைந்து
விடக் கூடாது என்பதற்காய்.....

நான் இன்னும்
தூங்கிக்
கொண்டே இருக்கிறேன்...

மற்றவர்களுக்கு....

கனவு என்பது
எதிர்பாராமல்
எதேச்சையாக எழுவது

எனது கனவு
நானாக விரும்பி
வரவழைத்துக் கொள்வது.....

எனது ஒரே ஒர் கனவு
என்று இருப்பது
கனவிலும் காண விரும்புவது

“அவள்”

அன்றும்
இன்றும்
என்றும்...

அவள்...

அவளே
எந்தன் கனவு

உயிரோடு
உயிர் ஒன்றி
எனது உயிரான
ஓர் உயிர்க் கனவு அவள்...
கனவில் கூட
கனவாகத் தோன்றும்
ஓர் அற்புதக் கனவு அவள்..

இரவிலும்
பகலிலும்
காலையிலும் மாலையிலும்...

மனதில் எழும்
நினைவு அலைகளில்
எப்பொழுதும்
நீந்திக் கொண்டிருக்கும் இந்தக் கனவு

இந்தக் கனவு...

கவிதை என்ற
ஒரு சொர்க்க பூமியை
எனக்குச் சாசனம் செய்து தந்தது

வார்த்தைகள் என்ற
இறகுகளை விரித்து

பறந்து பறந்து
வானத்தின் மேனியை
எனது எழுதுகோலால் தீண்ட வைத்தது...

இந்தக் கனவு

அவளது
அழகு ரூபத்தின்
இளமை வளைவுகளை

எண்ணி எண்ணி.....

வியந்து வியந்து...

கனவுக்குள்ளேயே
என்னைக் கரைய வைத்தது

இந்தக் கனவு

அஜந்தா ஓவியத்தின்
அற்புத சுகங்களை
எனக்கு அறிமுகம் செய்தது

இந்தக் கனவிற்காய்
நிறைய சமர்க்களங்களை
நான் சந்தித்து இருக்கிறேன்

இந்தக் கனவிற்காய்
பல தடவைகள் பலரைக்
காயப்படுத்தி இருக்கிறேன்

இன்னும்..

இந்தக் கனவிற்காய்
பல தடவைகள்
என்னை நானே
படுகாயப்படுத்தி இருக்கிறேன்

இந்தக் கனவினால்
பல தடவைகள்
படு தோல்வி அடைந்திருக்கிறேன்



தேவமைந்தன் இயேசு
மரணித்து
உயிர்த்தெழுந்தது போல...

பல தடவைகள்
மரணித்து
மரணித்து
மீண்டும் நான் உயிர்த்து எழுந்திருக்கிறேன்

இருப்பினும்
இந்தக் கனவை
நான் கைவிடுவதாக இல்லை

எத்தனை தடவைகள்
மரணித்தாலும்

மீண்டும் மீண்டும்
நான் உயிர்த்து எழுவேன்

அவ்வாறு
உயிர்த்து எழுந்து
மீண்டும் உறங்கப் போவேன்

மீண்டும்
எந்தன் கனவை
நான் கனவில் காண்பதற்கு

## 33. Sophia Loren (Actress)...

எனது மனதில் பதிந்த தமிழாக்கம் இது...
தவறுகள் இருந்தால் ஆங்கில அறிவு கொண்ட சான்றோர்கள் மன்னிக்கட்டும்....

Just Loved these lines written by
Sophia Loren (Actress)...

"When got enough confidence, the stage was gone.....
When I was sure of Losing, I won.......
When I needed People the most, they Left me........
When I learnt to dry my Tears, I found a shoulder to Cry on.......

When I mastered the Skill of Hating, Someone started Loving me from the core of the Heart......

And, while waiting for Light for Hours when I fell asleep, the Sun came out..... That's LIFE!!

No matter what you Plan, you never know what Life has Planned for you.......

Success introduces you to the World......
But Failure introduces the World to you.....

Always be Happy!! Often when we lose Hope and think this is the end...

God smiles from above and says, “Relax Sweetheart; It's just a Bend, not the End..!"
.............................................................

ஓவியம் வரைய
நான் கற்று முடித்த பொழுது
எனது கண்கள் பார்வையை இழந்திருந்தது....

தோல்வி நிட்சயம் என்று
நம்பிய பொழுதுகளில்

தாமாக வந்து
வெற்றிகள்
என்னைத் தழுவி கொண்டது...

நண்பர்கள் தேவையாக
இருந்த பொழுது
ஏனென்று கேட்க
என்னருகில் எவரும் இருக்கவில்லை.....

கன்னத்தில் வடியும்
கண்ணீர்த் துளிகளை
காய வைக்கும் வித்தையினைக்
கற்றுக் கொண்ட பொழுது...

என்னை அணைத்து
ஆறுதல் படுத்த
அன்பான உள்ளம் கிடைத்தது

வெறுப்பு என்ற
நெருப்பாற்றில்

நான் உல்லாசமாக
நீந்திக் கொண்டிருந்த பொழுது....

நான் நானாக
இருப்பதற்காக
ஒருவர் என்னை உளமார நேசித்தார்

மணிக்கணக்காக
காத்துக் கொண்டிருந்தேன்
வெளிச்சம் வரும் என்ற எதிர்பார்ப்புடன்...

ம்ம்ம்ம்
என்னவோ
நான் உறங்கிய பின்னரே
எனது வானத்தில்
சூரியன் கூட உதித்தது....

வாழ்க்கை என்றால்
இப்படித் தானா...

எதனையும்
எவ்வாறும் நாங்கள்
திட்டமிட்டு இருக்கலாம்...

ஆனால்
வாழ்வு எதனை எவ்வாறு
திட்டமிட்டு இருக்கிறது என்று
எவரால் எதிர்வு கூற முடியும்.....

முயற்சி என்ற கயிற்றை
பற்றி ஏறிக்கொண்டு
இருக்கும் வேளைகளில்

வெற்றியும்
தோல்வியும்
வேறுபடுவது
ஒரு சின்னஞ் சிறு நூலிழையிலேயே....

வெற்றி
எம்மை உலகுக்கு
அறிமுகம் செய்து வைக்கிறது

தோல்வி
எமக்கு உலகை
அறிமுகம் செய்து வைக்கிறது

நம்புங்கள்...

வாழ்வு
மகிழ்வு என்ற பூக்களை

முகர்வதற்கு மட்டுமே....

பெரும்பாலும்

தோல்வி
எம்மை நோக்கி
ஓர் காலடி எடுத்து வைக்க முன்னரே

நாமாக ஓடிச் சென்று
அவநம்பிக்கை என்ற
படு குழியில் குதித்து விடுகிறோம்...

எம்மைப் பார்த்திருக்கும்
இறைவன் ஓர் கணம்
தனக்குள் தானே சிரித்துக்  கொண்டே
கூறிக் கொள்வான்..

“தளராதே மகனே
மனம் தளராதே...

இது
ஓர் சிறு சறுக்கல் மட்டுமே

இது ஒன்றும்
முடிவான முடிவு அல்ல

நான் சமைத்த
நீண்ட ஒரு பாதை
உனக்காகக் காத்திருக்கிறது” என்று

## 34. ஒரு அன்னையர் தினத்தில் எனது தாயாருக்காக

அம்மா!

இதுவே
தமிழில்
நான் கற்ற முதல் கவிதை

உணர்வுடன்
உணர்வாய்
உயிருடன் உயிராய்
கலந்ததோர் உயிர்க் கவிதை

ஞான சம்பந்தன்
தேவாரம் பாடிய வயதில்
நான் பாடிய ஓர் திருவாசகம்

துருவ தூரங்கள்
கடந்த போதும்

நாடு விட்டு நாடு என்று
கடல் கடந்து வாழும் போதும்

அரை நூறு வயது
வாயிலில் வந்து
பார்க்கும் போதும்

இரு கரையும்
நரை வந்து
சிரிக்கும் போதும்

இரு மகன்கள்
தோளுயர வளர்ந்த பின்னும்

அம்மா
உங்கள் குரல் கேட்க
சிறு பிள்ளையாய் மனம் ஏங்கும்

எண்ண
எண்ண
எண்ணற்று எழும்
என் எண்ணங்கள்....

எழுத்து எழுத்தாய்
எழுதி எழுதி
என் எண்ணங்களை
எவ்வாறு நான் உரைப்பது

ஒரு
பெரும் கடலை
இரு சிறு கரம் கொண்டு
எவ்வாறு நான் இறைப்பது

வலி சுமந்து
நீங்கள் ஈந்ததோர் வரம்
என் இப்பிறப்பு

முப்பதுகள் முற்றுப்
பெற முன்னரே முற்றுப் பெற்றது
மகிழ்வான மண வாழ்வு

மீதமாய்
நீங்கள் தொடர்ந்த
அர்ப்பண வாழ்வு
எமது வாழ்வின் அத்திவாரம்

கல்லால் கட்டப்பட்ட
ஒரு பழைய வீட்டை
மகிழ்வு புரளும் மாளிகையாக்கியது
உங்கள் அன்பு

வசதிகள் அதிகம் அற்ற
ஓர் வாழ்வில்
எங்களை இளவல்களாக
எண்ண வைத்தது உங்கள் அன்பு

எங்கள் உலகம்
அம்மாக்களால்
அறிமுகம் ஆனது

அன்பு என்பது
நீங்கள்
தந்த தாய் மொழி ஆனது

மேன்மை
மென்மை
நீங்கள் கற்பித்த
வழிநெறிகள் ஆயின

எனது
பிள்ளைப் பராயமும்
உள்ளத்து உணர்வுகளும்

உங்கள் மொழி வழி
உங்கள் விழி வழி
அணு அணுவாக
அளந்து அளந்து செதுக்கப் பட்டது

புரிதல்
மகிழ்தல்
வாழ்தல்
என்பன ஓர் கலை

இவற்றைக்
கற்பித்த
ஒரு நடமாடும் கலாசாலை நீங்கள்

சுதந்திரம்
சுயமரியாதை
இவை இரண்டும்

சிறு வயதிலேயே
நீங்கள் கற்றுத் தந்த பாடங்கள்

எங்கள் வாழ்வு
எங்கள் தெரிவு
என்று எல்லாமே
எங்கள் எண்ணப்படி நடந்தேற

முகமலர்ச்சியுடன்
நீங்கள் தந்த ஆசிகள்
எங்கள் வாழ்வு என்ற படகிற்கு
துடுப்புக்கள் ஆயின

எத்தனை இழப்புக்கள்
எத்தனை தோல்விகள்
என்றும் நீங்கள் கலங்கி
நாங்கள் பார்த்தது இல்லை.

தொலையாமல்
தொலைக்காமல்
எங்கள் வசம்
இன்றுவரையில் இருக்கும்
ஒரே ஒரு செல்வம்....

நீங்கள்
காட்டி வளர்த்த
ஊட்டி வளர்த்த தன்னம்பிக்கை

ஆம்!

இன்னும்
ஆச்சரியம்
அடங்குவதில்லை

உங்கள் நம்பிக்கை வார்த்தைகள்....

எங்களை
மீண்டும் மீண்டும்
உயிர்ப்பிக்கும்




உங்கள்
எல்லையில்லா அன்பு
என் நண்பர்களையும்
உங்கள் புதல்வராக்க

அவர்களின்
அன்னையரையும்
உங்கள் வடிவமாய்
எண்ணிக் கையெடுத்துத் தொழ வைக்கும்

எழுத எழுத
இன்னும் இன்னும்
நீரூற்றாக ஊறிக் கொண்டே போகிறது

அன்றும் இன்றும் என்றும்
உங்கள் அன்பின் முன்
நான் சிறு குழந்தையாக...

உங்கள்
வழிகண்ட செழுமைகளில்
புரளும் ஓர் இளவல் ஆக
வாழ விரும்பும்

உங்கள் மகன்

## 35. எங்கள் வீடு

இது
நாங்கள்
பிறந்து வளர்ந்த வீடு

வீட்டின் ஒவ்வொரு மூலையிலும்
எமது பரம்பரையின்
மூச்சுக் காற்றுக் கலந்திருக்கும்

எமது வீடு என்பது
எமது முகவரி மட்டும் அல்ல

எமது பரம்பரையினரின்
அடையாளத்தைப்
பட்டை தீட்டிய ஒரு பட்டறை...

எங்கள் உணர்வையும்
எங்கள் உயிரையும்

நாங்களே
சிறிது சிறிதாக
செதுக்கிக் கொண்ட
ஓர் அழகான மாமல்லபுரம்

எனது தாயும் தந்தையும்
அவர்தம் தாயும் தந்தையும்
அன்பினால் கூடி மகிழ்ந்த
ஓர் அதிசய ஆலயம் இது...

இங்கு தான்..

கூட்டுக் குடும்பம் என்ற
ஒரு சொர்க்கபுரி
எமக்கு அறிமுகமானது...

நாங்கள்
தவழ்ந்து விழுந்து

பின்
எழுந்து நடந்து
சிறகு விரித்து

பறக்கப் பழகிய
ஓர் அழகான நீல வானம் இது....

அயலவர்
உறவினர்
உற்றவர் மற்றவர்
நண்பர்கள் என்று அத்தனை பேரையும்

அன்று
அறிமுகம் செய்தது
இந்த வீட்டின் முற்றம்...

மாலைப் பொழுதுகளில்- என்னைத்
தனது மடியில் வைத்து
வெண்ணிலவையும்
விண்மீன்களையும் பற்றி

எனது அன்னை
கதை கதையாகக் கூறியது
இந்த வீட்டின் படிக்கட்டுக்களில் வைத்தே...

அங்கு இருந்து தான்
எனது கற்பனைகள்
விண்மீன்கள் வரை வளர ஆரம்பித்தது

மகிழ்வின்
உயிரெழுத்துக்களை
இந்த முற்றத்தில் தான்

எழுதி எழுதிக் கற்றுக் கொண்டேன்
இங்கு தான்
பிள்ளைப் பராயத்து ஆசைகள்
துளிர் விட ஆரம்பித்தது

இந்த வீட்டின் சுவர்களில் தான்
எனது கனவுகளையும்
எனது கவிதைகளையும்
முதன் முதலில் கிறுக்க ஆரம்பித்தேன்

இரவிரவாக விழித்திருந்து
உறங்காமலே கனவுகள் காணவும்
மனதோடு பேசிப் பேசி காலத்தைக் கரைக்கவும்
கற்றுத் தந்த ஓர் கல்லூரி இது

ஆள ஒரு தேசம் இல்லை
குற்றேவல் செய்ய ஆட்கள் இல்லை

ஆனாலும்
வாழும் இடத்தை
ஓர் அரண்மனை போலவும்

வாழும் வாழ்வில் - எம்மை
இளவல்களாய் நம்பி மகிழ வைத்தது
நாங்கள் வாழ்ந்த இந்த வீடு...

மங்கிய மாலை நேரங்களில்
மல்லிகைப் பந்தலின் கீழ்
எங்கள் வீட்டுத் தேவசபை கூடும்

மங்கலான நிலவு ஒளியில்
அமுதமென்று உண்ட
அம்மாவின் கை பிசைந்த
பழஞ்சோற்றுக் கவளம்

இன்று நினைத்தாலும்
வாயில் அமிழ்து ஊறும்
கன்னங்களைக் கண்ணீர் நனைக்கும்




எமது தோழர்கள்
எப்பொழுது வந்தாலும்
உண்டு உறங்கி ஓய்வெடுக்க
இடம் கொடுத்த ஒரு பாசறை எங்கள் வீடு

இந்த ஆலயத்தில்
உறவுகளாக உயிருக்கு உயிராய்
பழகியவர்கள் எத்தனை பேர்...

வழி நடுவில்
நாம் இழந்தவர்கள்
எத்தனை பேர்...

திசைக்கு ஒருவராய்
பிரிந்து சென்றவர்
எத்தனை பேர்...
இன்னும்
அதே அன்புடன் வாழ்பவர்
எத்தனை பேர்....

இன்னும்
என்ன என்னவோ....

எழுத எழுத
எழுதிக் கொண்டே போகலாம்

பின் தோட்டத்தில் உள்ள
தென்னங் கீற்றுக்களைத்
தீண்டிச் செல்லும் தென்றல் காற்றும்

கொய்யா மரத்தில்
ஓடி விளையாடும் அணில்களும்
அவற்றின் கீச்சல் சத்தங்களும்

அடிக் காணியின் வேப்ப மரத்தில்
குடியிருக்கும் குயிலோசையும்

இன்னும்
எனது மனதில்
ஓயாமல் வட்டமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

## 36. நானும் ரோஷியும்

எப்போதும்
நூறு நூறு மனிதர்கள்
கூத்தும் கும்மாளமுமாய்...

திருவிழா சன சமுத்திரத்தில்
வேடிக்கை பார்த்துப் பார்த்து
நடந்து செல்லும்
சிறு குழந்தை போல நகர்ந்து சென்றது
என் இளமைக் காலம்...

இன்று
என்னுடன் கூட எதுவும் இல்லை...

இந்தத் தனிமையும்
இரைச்சல் நிறைந்த நிசப்தமும்
நத்தை வேகத்தில் நகரும் நேரமும்

வாழ்வின்
வாசலில் வந்து நின்றவாறு
உபாதைகளால்
வியாக்கியானங்கள் கூறும்
புதுப் புது வியாதிகளும்
இவ்வாறுதான்
இன்றைய என் நாட்கள்...

மனம் விட்டுப் பேச
மனிதர்கள் என்னருகில் இல்லை

பேசாமல் இருந்து இருந்து
நாக்கு அண்ணாக்குடன்
ஒட்டிக் கொண்டு விட்டது

பேச வேண்டும்
என்றதோர் தீராப் பசி
உணர்வையும் உயிரையும்
அணு அணுவாய் கொல்கிறது

ஏதோ நினைவுகளில்
உறைந்து போயிருந்த என்னை

கால்களை உரசி உரசி
வெளியில் வருமாறு அழைக்கிறாள்
எனது ரோஷி.....

இந்தக் குளிருக்குள்
ஒவ்வொரு காலைப் பொழுதும்
ரோஷியுடன் ஒன்றாய் நடை பயிலல் என்பதே
எனக்கு என்று இன்று மீதமிருக்கும் சந்தோசம்

ரோஷி முன்னால் நடக்க
அவள் சடை அழகையும் நடை அழகையும்
பார்த்து இரசித்தவாறு பின் தொடர்கிறேன்

பாதையில் எதிர்ப்படும்
இளையவர்களில் இருந்து
என்னொத்த வயோதிபர்கள் வரை
ரோஷியைப் பார்த்துப் பார்த்து
விழிகளைத் தொலைக்கின்றனர்

விழிகளால் பேசியும்
ஆசை அடங்காத ஓர் சிலர்
அவள் முதுகில் தடவி
நலம் விசாரிக்கின்றனர்

கூட வரும் என்னை
ஏனோ எவரும்
கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

மனிதருடன் பேசும்
மனமுள்ள மனிதர்கள் எல்லாம்

கடந்த காலத்துடன் கரைந்து போயினரா...

மனதிற்குள் வெடிக்கும்
எனது துயரத்தைக்  கேட்டு
ஆறுதல் கூற
எவரும் இங்கு இல்லை
என்ற ஓர் எண்ணம்

என்னையும் அறியாமல்
கண்கள் இரண்டையும்
கண்ணீர்த்துளிகளால் மறைத்து
பாதையில் என்னை இடற வைக்கிறது

பாவம் ரோஷி
எனது பரிதாப நிலையறிந்து
சுற்றிச் சுற்றிக் குரைத்துப் பார்க்கிறாள்
எனக்கு உதவுமாறு...

எவரும் அங்கு வரவில்லை...
பேசவே வராதவர்கள்
கரம் பற்றித் தூக்க வருவாரா...

நானே மெல்ல எழுந்து
மெல்ல மீண்டும் நடக்க ஆரம்பிக்கிறேன்
நானிருக்கும் வயோதிப இல்லத்தை நோக்கி. . .

## 37. எழுதாத கவிதைக்கு வரையாத ஓவியம்...

அது
ஓர் வசந்த காலம்...

கனவுகளும்
கவிதைகளும்...

சிறிது சிறிதாக
துளிர் விட
ஆரம்பித்த நாட்கள் அவை...

ஒரு நாள்
எனது பாதையில்
நான் நடந்து போய்க் கொண்டிருந்தேன்....

பாதையின் ஓரத்தில்,
ஒரு மர நிழலின் கீழ் நின்றவாறு
ஒரு ஓவியத்தை வரைந்து கொண்டிருந்தாய்...

சுற்றி நின்று பலர்
உற்றுப்
பார்த்துக் கொண்டிருந்தனர்

உன்னைப் பார்த்துக்
கொண்டிருந்தனரா

இல்லை.

நீ வரையும் ஓவியத்தைப்
பார்த்துக் கொண்டிருந்தனரா
என்று நான் பார்க்கவில்லை...

பார்த்த கண்கள்
பார்த்தவாறு நானும்
பார்த்துக் கொண்டே இருந்தேன்.....

மனித கற்பனைக்கும்
எட்டாத ஓர் அழகு ஓவியம்
இன்னும் வரையப்படாமலே இருக்கிறது

என்ற ஓர் உண்மையை
அன்று
நான் உணர்ந்து கொண்டேன்...

பின் வந்த நாட்களில்...

எனது இரு விழிகள்
தூரிகையாக...

எனது விழிகள்
வரையும்
அற்புத ஓவியமாக நீ...

இரவும் பகலும்
நிஜத்திலும் நினைவிலும்
உறக்கத்திலும் விழிப்பிலும்...

உன்னை
நான் வரைந்து
கொண்டே இருந்தேன்...

நாட்கள்
நந்தவனத்தின் நறுமணத்துடன்
நகர்ந்து கொண்டு இருந்தன...

உன்னை
வியந்து வியந்து...

வியப்பின் விளிம்பில்
நடந்து செல்லக் கற்றுக் கொண்டேன்

நீ இயல்பாகப் பேசிக்கொண்டு இருப்பாய்

உனது வார்த்தைகள்
காற்றோடு கலந்து
எனது செவிகளில் வந்து நடனமாடும்...

உனது பார்வை
மயிலிறகு போல
தினம் தினம்
எனது உயிர்ப்பூக்களை வருடி விடும்...

இவ்வாறாக
அது ஓர் வசந்த காலம்...

இன்று..

என்னைக்
கடந்து செல்லும்
ஒவ்வொரு கணமும்

உனது விலாசத்தை
விசாரித்துக் கொண்டே
என்னைக் கடந்து செல்கிறது...

நான் சந்திக்கும்
ஒவ்வோர் கணத்தையும்
விரட்ட நடக்கும் போராட்டத்தில்

எனது உயிர் மெழுகு
சிறிது சிறிதாக
உருகிக் கொண்டிருக்கிறது.......

நீ என்னுடன் கூட
இல்லாத
இன்றைய பொழுதுகளில்

எனது மூச்சை
உள்ளிழுத்து
வெளிவிடுவது என்பது கூட



ஒரு பகீரதப் பிரயத்தனமாக இருக்கிறது...

இறுதியாக...

உன்னில்
என்னுயிரை எழுதுவதே
எனது வாழ்க்கைப் புத்தகத்தின்
உயிர்ச் செய்தி என அறிக...

## 38. ஒரு துளிக்குள் ஒளிந்திருக்கும் ஒரு மகா சமுத்திரம்

இங்கு சொல்லப்படுவது எனக்கு மட்டும் பொருத்தமானது இல்லை.

ஒரு பெரும் சாம்ராச்சியத்தையே ஆண்டு கொண்டு இருப்பதாகக் (மனதுக்குள்)
கர்வத்துடன் இருக்கும் எனது நண்பர்கள் எல்லோருக்கும் இக் கவிதை சமர்ப்பணம்...
***********

"நான் ஒன்றும்
ஒரு சமுத்திரத்தில்
கலந்திருக்கும் ஒரு சிறு துளி அல்ல

ஒரு துளிக்குள்
ஒளிந்திருக்கும்
ஒரு மகா சமுத்திரம் நான்"
-ரூமி-
***********

இந்த அந்நிய தேசத்தில்
என்னை அறியாதவர்கள்
நான் யார் என்று வினவுகிறார்கள்

நான் யார் என்று
இவர்களுக்குச் சொல்ல;

எவ்வாறு நான்
ஒற்றை வரியில் விடையளிக்க;

நான் யார் என்று கூறினால்
இவர்களால்
நம்ப முடியாமல் இருக்கும்

எனது வரலாற்றைக் கூறினால்
இவர்களால் ஏற்றுக் கொள்ள
முடியாமல் கூட இருக்கும்

நான் என்பது
நான் என்ற
தனி ஒரு மனிதன் அல்ல

நான் என்பது
நான் கடந்து வந்த
பாதைகளின் ஒரு வரைபடம்

நான் என்பது
நான் சந்தித்த
அனுபவங்களின் ஒரு சரித்திரம்

ஆயிரம் ஆயிரம்
ஆண்டு காலத்துப்
பழம் பெரும் பண்பாட்டுக் கூறுகளைச்
சுமந்து வந்த ஒரு பரம்பரை நான்

அறிஞர்களின் நூல்களில்
நீராடி நீராடி என்னைப்
புனிதப்படுத்திக் கொண்டிருக்கிறேன்

என் காலமெல்லாம்
வேறுபட்ட பாசறைகளில்
என்னைப் பட்டை தீட்டிக்கொண்டிருக்கிறேன்

நான் ஒன்றும்
விபத்துக்களில் இருந்து
தற்செயலாகத் தப்பி வந்தவன் அல்ல;

நூறு நூறு சமர்களில்
போராடிப் போராடி

சமர்க்களத்திலேயே வாழ்வை
நடாத்தப் பழகிக் கொண்டிருக்கிறேன்

என்னால் படைக்கப்பட்ட
ஒரு உலகத்தின்
ஏகபோக உரிமையாளன் நான்

அரை நூற்றாண்டு காலமாய்
நான் செதுக்கிச் செதுக்கி
ஒரு அற்புதமான உலகை
எனக்காக உருவாக்கி இருக்கிறேன்

என்னைக் கடந்து செல்லும்
ஒவ்வொரு கணத்திலும்
எனது நினைவை
நான் எழுதி வைக்கிறேன்

முட்களின் நடுவே
ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும்
றோஜா மலர் போல எனது வாழ்வு

நூறாயிரம் துயரங்கள்
நூறு நூறு துரோகங்கள்;

இவை எல்லாவற்றையும்
கடந்து என்னைச் சுற்றி
நல்ல சில நண்பர்களைத்
தேர்வு செய்து வைத்திருக்கிறேன்

காரிருளிலும் வெளிச்சத்தின்
விலாசத்தைத் தேடுவதற்கு
எனது விழிகளுக்குக்
கற்றுத் தந்திருக்கிறேன்

பாலைவனத்தின் பாதையில்
பயணிக்கும் போதும்;

தென்றலின் தீண்டல் பற்றிக்
கவிதைகள் வரையக்
கற்றுக் கொண்டிருக்கிறேன்

நான் நடந்து வரும்
நீண்ட பாதையில்- எனக்கு
அதிகம் அறிமுகமானவை தோல்விகளே

ஆகவே தோல்விகளால்
நான் துவண்டு விடுவதில்லை

தோல்விகள் என்னைத்
துவளச் செய்வதுமில்லை

தோல்விகள்
எனக்குள் இருக்கும் என்னை எனக்கே
அறிமுகப்படுத்தும் ஒரு கீதா உபதேசம்

நான் போராடிக் கொண்டிருப்பது
எனக்காகவே தவிர
வெற்றி தோல்விகளுக்காக அல்ல

இறுதியாக,

இந்தப் பிரபஞ்சத்தில்
எனக்கான பிராண வாயு
மறுக்கப்படும் வரை;

எனது வாழ்வை
உயிர்ப்புடன் வாழுவது என்ற
ஒரு முடிவான முடிவுடன்
நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்

## 39. ஷோபனா என்றதோர் சகாப்தம்

இந்த நூலின் உருவாக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய எனது அன்புத் தோழி ஷோபனாவின் இழப்பின் போது எனது கண்ணீரைத் தொட்டு நான் எழுதிய கண்ணீர் அஞ்சலி இது..

தான் முன் இருந்து இந்த நூல் வெளியீட்டை நடத்துவேன் என்று எனக்கு நம்பிக்கை தந்த தோழிக்காக இந்த நூலிலேயே கண்ணீர் அஞ்சலி ஒன்றை வெளியிட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திய காலத்தை என்ன என்று சொல்லி நான் அறம் பாடுவது:

எங்கிருந்து தொடங்க?

என்ன என்று எடுத்து இயம்ப?

எல்லாமே ஒரு கனவு போல
கலைந்து போய் விட்டது....

விதி என்பது என்னவோ விசித்திரமானது;

எவரை எங்கே எப்போது எவ்வாறு
சந்திக்க வைக்க வேண்டும் என்று அழகாக
தீர்மானிக்கிறது...

எவரை எங்கே எப்போது எவ்வாறு
பிரிக்க வேண்டும் என்றும் கொடூரமாக
முடிவெடுக்கிறது....

ஷோபனா என்ற ஒரு அற்புதமான நண்பியை நான் முதல்

முதலில் சந்தித்தது ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர்
நிகழ்ந்த ஒரு ஒன்றுகூடலில் தான்...

அன்று வளாக நண்பர்களின் ஒரு ஒன்றுகூடல்....

அங்கு எனக்கு நெருக்கமான சில நண்பர்கள்
இருந்தனர்...

அத்துடன் அறிந்த பல முகங்களும்
அறியாத சில முகங்களும் இருந்தன...

அன்றைய ஒன்றுகூடலின் நிகழ்ச்சிகள்
நிகழ்ச்சி நிரலின் படி நடந்து கொண்டிருந்தது....

பக்கத்தில் அமர்ந்திருந்த நண்பர்களுடன்
நான் உரையாடிக் கொண்டிருந்தேன்...

இதோ இப்போது இவள் முறை...

“எண்ணப்பறவை சிறகடித்து
விண்ணில் பறக்கின்றதா”

இவள் தெளிந்த குரலில் பாடுகிறாள்

நான் என்னை மறந்து
கேட்டுக் கொண்டே இருக்கிறேன்...

கேட்டுக் கேட்டு
வியப்பின் விளிம்பில்
நடந்து கொண்டே இருக்கிறேன்....

செவிகளாலும் பார்க்க முடியும்
என்ற உண்மையை
அன்று தான் முதன் முதலில்
நான் உணர்ந்து கொண்டேன்....

அன்றிலிருந்து
எனது செவிகள்

இவளது குரலுடன் நட்பானது....

எமது ஒன்றுகூடல்களில்
இவளது வசீகரமான குரல்
எமது நண்பர்களின் செவிகளை
வசப்படுத்தி கொண்டது...

இவளது பாடல் இல்லாமல்
எமது நிகழச்சிகள் இல்லை என்றானது...

மெல்ல மெல்ல
நல்ல நல்ல
நண்பர்கள் ஒன்று சேர்ந்தனர்...

அன்பு நிறைந்தவர்கள்
அறிவைத் தேடுபவர்கள்
ஆற்றல் கொண்டவர்கள்
அமைதி நிறைந்தவர்கள் என்று
ஒரு நண்பர்கள் தளம் உருவானது....

கோவிட் தொற்று
உச்சத்தில் இருந்த நாட்களில்;

உலகமே ஒடுங்கி
இருந்த வேளையில்;

வட துருவத்தில் வாழும் உறவுகளையும்
தென் துருவத்தில் வாழும் உறவுகளையும்;

இணையவழியில் ஒன்றிணைத்து
ஒன்றுகூடல்களை நடாத்தினோம்

கலை விழாக்கள் நடாத்தினோம்
கலந்துரையாடல்கள் நடாத்தினோம்
பிறந்த நாட்களைக் கொண்டாடினோம்

எமது எல்லா முயற்சிகளின்
மையமாக இருந்தவள்

ஷோபனா என்ற அற்புதமான நண்பி

இவளது பாடல் எம்மை அசர வைத்தது

இவளது அயராத தேடல்
எமது மனதினில் இவளை உயர வைத்தது

வானம்பாடியாய் எம்முடன்
சிறகடித்து பறந்தவள் இவள்;

மென்மையான
இவளது சின்னச் சிரிப்பில்
ஆயிரம்ஆயிரம் ரோஜாக்கள்
மனம் முழுவதும் பூப்பூக்கும்....

பிள்ளை போன்ற
வெள்ளை மனம்...
தேனினும் இனிய வார்த்தைகள்
பொன்னில் செய்த ஒரு தெய்வீகப் பெண்ணவள்

“இவள் இனி இங்கு இல்லை“

என்ன கணக்கில்
எவர் வைத்த சட்டம் இது?

இது என்ன?

எது உண்மை
எது பொய்
எதனை என்று நம்புவது?

எவர் வருவார்
எவர் செல்வார்
எங்கு சென்று ஆறுவது?

கால் நடக்கும்
ஒரு தேவதையாய்
நேற்றுவரை எம்முடன் அவள் இருந்தாள்

“இவள் இனி இங்கு இல்லை“

அவசர அவசரமாக
என்ன நடக்கிறது இங்கு?

பூப்போன்ற
ஓர் உயிரப் புன்னகையை;

கோடரி கொண்டு
வெட்டி எடுக்கும்
கொடுமையைச் செய்தவன் எவன்?

எம்மை நன்கு அறிந்தவள்
நட்பைப் பெரிதாய் மதிப்பவள்
குற்றம் குறைகளை மறப்பவள்

அன்பு என்ற ஒரு மொழியில்
மனதுடன் மனம் விட்டு பேசக் கற்றவள்

“இவள் இனி இங்கு இல்லை”

நாம் எது செய்தாலும்
மனம் திறந்து பாரட்ட

“இவள் இனி இங்கு இல்லை“

மனம் தளர்ந்து
நம்பிக்கைகள் குன்றி
நலிந்து போய் நாமிருக்கையில்

எமது பெருமைகளை
எமக்கே உணரவைத்து
எம்மை உற்சாகப்படுத்த

“இவள் இனி இங்கு இல்லை“

இனி வரும் விழாக்களில்

ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு
நானிருக்கிறேன் எங்களுக்காய்
என்று நட்புடன் புன்னகைக்க

“இவள் இனி இங்கு இல்லை“

நெஞ்சே வெடித்து விடும்
போலிருக்கிறது
நண்பி அவளை நினைக்கையில்....

இவளது இழப்பு
பேசத் தெரிந்த ஊமையாக
எம்மை மாற்றி இருக்கிறது

வார்த்தைகள் மூலம்
விளக்க முயன்று முயன்று
நாம் தோற்றுப் போகிறோம்
கரை புரளும் எமது சோகத்தை
வெளிப்படுத்தும் முயற்சியில்....

மீதம் இருப்பது
கன்னத்தை நனைத்து
உருண்டோடும் கண்ணீர்த் துளிகள் மட்டுமே...

எமது கண்ணீர் துளிகளை
இவள் புனித யாத்திரைக்கு
காணிக்கை ஆக்குகின்றோம்..

நட்பின் பிரிவால் வாடும்
நண்பர்கள் - நண்பிகள்

# 10. நட்பில் பூத்த மலர்கள்

கவிதை எனது மொழி...

மழையில் நனைந்த ஒரு பொழுதில் கிடைக்கும் சுகானுபவம் செல்வனின் கவிதை மழையிலும் கிடைப்பது என்னவொரு விந்தை!

என் பள்ளிக்காலத்திலிருந்து இவருடைய கவிதைகளின் ரசிகை நான். கவிஞர் மு. மேத்தா அவர்களின் கவிதைகளை ரசித்து வந்த எனக்கு மெல்ல மெல்ல செல்வனின் கவிதைகளின் மேல் ஏற்பட்ட ஈர்ப்பு காலஞ் செல்லச் செல்ல அவருடைய கவிதைகளின் மேல் காதலாக மாறியது..

இவர் தன் கவிதைகள் ஒவ்வொன்றையும் படைக்கும் போது தன் இலக்கிய ரசனையை மட்டுமல்ல கவிதைகளின் தரத்தையும் மேம்படுத்திக் கொண்டு வந்ததை என்னால் உணர முடிந்தது..

மழையில் நனைந்த ஒரு பொழுதில் என்ற கவிதை வரிகள் அழகு என்றால் இப்படித்தான் இருக்குமோ என்று என்னை எண்ண வைக்கின்றது. எளிமையான வர்ணனையும் யதார்த்தமான கற்பனையும் நம் உணர்வுகளை எல்லாம் தட்டி எழுப்புகின்றது.

அழகிய காலைப்பொழுதின் வருடல் கன்னத்தில் உருண்டோடும் கண்ணீர்த் துளிகளைக் கண்டு நெருடலாக மாறி கவிஞருடன் இணைந்து கவி மழையில் என்னையும் பயணிக்க வைக்கின்றது.

இந்தக் கவிதை தொகுப்பு முழுவதையும் வாசித்துப் பார்க்கையில் கவிஞரின் இரசனையை, ஆழமான உணர்வுகளை, அவர் வாழ்வியல் நிகழ்வுகளை அழகிய உவமைகள் மூலமும் எவருக்கும் புரியும் படியான படிமங்கள் மூலமும் பார்த்துப் பார்த்துச் செப்பனிட்டு ஒரு கைதேர்ந்த சிற்பியின் இலாவகத்துடன் வடிவமைத்து இருக்கிறார்.

மழையில் நனைந்த ஒரு பொழுதில் என்கின்ற இந்தக் கவிதைத் தொகுப்பு கவிஞரின் இலக்கியப் பயணத்தின் இன்னொரு மைல்கல் எனலாம்..

இந்த கவிதை தொகுதியில் என்னை வெகுவாக கவர்ந்த சில வரிகளை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"நானும் நீயும்" என்ற கவிதையில்

"நீ கடல் அலை
நான் கடற்கரை

உனது அமைதி உனது பேரிரைச்சல்
எனது அமைதி எனது மௌனம்"

என்ற வரிகள் கரையைத் தொட்டு செல்லும் கடலலைகள் நம் கால்களை முத்தமிட்டு விட்டு செல்லும் போது வார்த்தைகளில் சொல்ல முடியாத ஒரு பரவச உணர்வை தருகின்றது.

வார்த்தைகளில் வார்க்க முடியாத கவிதையில் எனக்கு பதிலாக உன்னைச் சுமந்து கொண்டு வருகிறேன் என்று கவிஞர் கூறும் போது ஒருவரை ஒருவர் மனதார நேசிக்கும் இருவரின் காலங் கடந்த சந்திப்பின் போது ஒருவருக்கொருவர் சொல்ல முடியாத ஏக்கங்களையும் தவிப்புகளையும் மீண்டும் திரும்புகையில் (அவள்) நினைவுகளாகச் சுமந்து வருவதை ஆழமாக விளக்குகிறார்.

வடகடலோரம் கவிதை கவிஞருடைய வாழ வாழ்க்கையில் இந்தக் கடற்கரை எத்துணை முக்கியமாக விளங்கி உள்ளது என்பதை எடுத்து இயம்புகிறது. இங்கு கடலலைகளின் பேரிரைச்சலுக்கும் மேலாக கவிஞரின் மனக்குமுறல்கள் கண்ணீரை வரவழைக்கின்றது. ஒரு முறை கட்டி அணைத்து கண்ணீர் விட்டுக் கதறி அழ வேண்டும் போலத் தோன்றுகிறது என்ற வரிகளை வாசிக்கையில் இப்படி எல்லாம் கூட இயற்கையிடம் சரணாகதியடைய முடியுமா என்று வியப்பாக இருக்கிறது..

எனது பிரிய சகியில் காரிருள் சூழ்ந்த பாதையில் தட்டுத் தடுமாறி நடந்து செல்லும்போது ஒரு கண மின்னல் கீற்றாக தான் உணர்ந்து கொண்ட உண்மையை உணர்ந்து கொண்டாலும் காலம் தன்னைக் கட்டி போட்டு விட்டதென்று அவர் தவிக்கும் விதம் அருமை!

எனினும் தன் பிரிய சகிக்கு உண்மையாக இருப்பதையும் அழகாக கூறி தன் பயணத்தைத் தொடர்கிறார்... யார் இவன் என்கிற கவி வரிகள் முழுதும் காதல் உணர்வுகள் கொட்டி கிடைக்கிறது. இந்தக் காதலுக்காகக் காதல் உலகை மட்டுமல்ல இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் சாசனம் எழுதித் தரலாம் என்று எண்ண வைக்கின்றது.

மல்லிகையாய் மலர்ந்த பொழுதில்..கவிதையை வாசிக்கும் போது காதல் என்றால் என்னவென்று வினவும் பொழுது அந்த காதல் என்னவெல்லாம்

செய்யும் என்று ஒவ்வொரு வண்ணங்களில் அங்கு ஒரு காதல் உலகமே சிருஷ்டிக்கப்படுகிறது. உனது காதல் சொட்டும் தீண்டலில் கரையும் வேளையில் தான் நான் உணர்ந்து கொள்கின்றேன் மலராக ஏன் மலர்ந்தேன் என்று…

என்னவொரு அபரிதமான உணர்வு!

இப்படிப்பட்ட ஒரரு காதலை நாம் சில நொடிகளாவது வாழ்ந்து பார்த்திருக்காவிடின் நம் பிறவிக்கு அர்த்தம் ஏது என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

அன்னையர் தினத்தில் இவர் தன் அன்னைக்கு எழுதிய கவிதை தன் உறவுகள் மீதான இவருடைய அபரிதமான நேசத்தையும் தன்னலமில்லாத தாயன்பையும் கண் முன்னே படம் பிடித்து காட்டுகின்றது.

இவருடைய எங்கள் வீடு என்ற கவிதையை வாசித்தால் ஒரு தடவையாவது அங்கே சென்று வர வேண்டும் என்று எண்ண வைக்கும். அத்தனை அழகாக தன் வீடு என்பது உயிருள்ள ஒரு கனவாகி விட்டதை தவிப்புடன் கூறி இருப்பார்.

எழுதா (உயிர்) கவிதைக்கு வரையாத (உயிர்) என்ற அற்புதமான கவிதை வரிகளில் தனது கட்டுக்கடங்காத காதலை வரிகள் தோறும் ஓவியமாக தீட்டித் தனது உயிர் மெழுகே கரைந்து விடுமளவு உருகி உருகி தன் உயிரோவியத்தை வரைந்து இருக்கிறார். என்னவொரு அபாரமான கற்பனை! இந்தக் கவிதை தொகுப்பை வாசிக்கையில் கவிஞரின் அபரிதமான கற்பனைத் திறனை கண்டு வியப்பு வருகிறது.

தன் நாட்டை,வீட்டை, உறவுகளை, இயற்கையை நேசிக்கும் கவிஞரின் உணர்வுகளை ஆழ்ந்து நோக்கினால் எம் வாழ்க்கைப் பயணத்தில் கூட இதே போன்று பல நிகழ்வுகளின் விம்பங்கள் கண் முன்னே வந்து போகின்றது. நம்மையும் தன் பயணத்துடன் மனமொன்றிப் பயணிக்க வைத்த கவிஞரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

அண்ட சராசரங்கள் யாவும் இவருக்கு வெற்று தாளாக, சூரியனே எழுது கோலாக, விண்மீன்கள் எல்லாம் இவர் இரசிகைகளாக பால் வீதியில் கவிஞரின் பயணம் இனிதே தொடர்கிறது..

அற்புதமான இலக்கிய இரசனை, அருமையான கற்பனை, எளிமை யான நடை, ஆங்காங்கே தெளித்துள்ள இயற்கையின் வனப்புகள் எல்லாம் இவர் கவிதைத் தொகுப்பை மேலும் மேலும் மின்ன செய்வதுடன் ஒவ்வொரு கவிதையை வாசிக்கும் போதும் நம் மனக்கண்ணுள்ளே காட்சிகளாக விரிய வைத்து நம்மையும் அவருடன் பயணிகள் வைத்த கவிஞர் நடா சுப்பிரமணியம் (செல்வன்) அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

இத்தொகுப்பை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் எங்காவது

ஓரிடத்திலாவது குறிப்பாக வடகடலோரமும், காதலில் மலர்ந்த மல்லிகையும், பொன்னிற கடற்கரையும், மொழு மொழு என்ற பொன் வண்டும்,

பெருமரத்தின் காதலும், நம்மை விட்டு பிரிந்து சென்ற அன்பு நண்பி சோபனாவின் நினைவுகளும் மனதை விட்டு நீங்காது இருந்து இருக்குமென்று நினைக்கிறேன். குடை இல்லாத பரவசமான கவி மழை என்பதா பருகப் பருக தெவிட்டாத தேன் மழை என்பதா!

எங்கு நோக்கினும் இரத்தினங்களும், பவளங்களும், வைடூரியங் களும், முத்துக்களும் என்று இந்த கவிதைப் புதையலில் இருந்து எதை எடுத்து அணிவது, எதை விட்டு விடுவது என்று பெரும் கையறு நிலையில் நான் இருக்கிறேன்... இருப்பினும் இந்தக் கருத்துரையை நிறைவு செய்ய வேண்டியுள்ள இச்சந்தர்ப்பத்தில் இக்கருத்துரையை எழுத வாய்ப்பளித்த கவிஞருக்கு நன்றி கூறிக்கொண்டு "செல்வன் என்கின்ற அற்புதமான கவிஞரின் இலக்கியப்பயணம்" மேன்மேலும் பல வெற்றிப்படிகளை கடந்து எண்ணற்ற சாதனைகள் படைத்து சீரும் சிறப்புடன் தொடர வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்!

நன்றி!

அன்புடன்
செ. துஷ்யந்தி.

## 11. நட்பில் பூத்த மலர்கள்

ஆஹா! இடையில் சிந்திய மழைத் துளியைச் சேர்த்து வைத்து அதை மின்னல் கொண்டு மாலையாகக் கோர்த்து விட்டுள்ளார், கவிஞர்.

காலை நேரம், சாலையோரம் தேவதைக்கு ஒப்பானவளை தேன் சுரக்கும் வார்த்தைகளால் வருடி விட்டுள்ளார்.

எனக்கென்னவோ ஒரு ஏக்கம்! கார்மேகக் கூந்தலுடையாளை சற்று நேரம் அந்த மழைக்குள் நனைய விட்டிருக்கலாமோ என்னவோ; அதில் நனைவதற்கு ஏன் தயக்கம்; அப்படி மழையில் நனையவில்லையென்றால் நாம் வாழ்நாளில் பாதி இழந்ததற்குச் சமம்.

மழையில் நனையும் காரிகைளூ அவளைப் பார்த்தாலே பரவசமாம். காதலில் காத்திருப்பில் தான் சுகமே உள்ளது என்பதை கவிஞர் நடா நாசூக்காகச் சொல்லியுள்ளார்.

வளைந்து நிற்கும் வானவில்; வழிந்து வரும் நீரருவி; அந்த நீலக் கடலுக்குள் இரு நீலக் கண்மணிகள்; அதற்குள் தன்னையே தொலைத்து விட்டார் கவிஞர்!

கடற்கரையோரம்தான் எத்தனை காதல்! கண்ணீரைக் கடலலைகள் என்ன கண்டுகொள்ளவா போகின்றன? காதலின் வலிகள் சொல்லிய கவிதை அழகு!

கொட்டும் மழையின் மத்தியில் வெட்டும் மின்னல்களுக்கிடையில் எழும் ஒலிகளில் தான் உண்மை, பொய் என்ற பேதங்கள் இருக்கலாம், எனும் வரிகள் என்னைக் கவர்ந்துள்ளன.

உஷா சங்கர்

## 12. நட்பில் பூத்த மலர்கள்

மனதோடு பேசுதல் கவிதா நூலிற்கு நண்பி பராவிடம் இருந்து பெற்ற வாழ்த்து மடல்.

இந்த வாழ்த்து மடலை நான் பெறும் போது நான் கனவிலும் கூட நினைக்கவில்லை எனது அடுத்த நூல் வெளி வருவதற்குள் அவள் மீளா தேசம் சென்று விடுவாள் என்று…

எனது அன்பு நண்பா செல்வன்!

உனது மனதோடு பேசுதல்
விண்ணில் பறந்து மண்ணைத் தொட்டு
என் கண்ணில் பட்ட போது
நான் வியந்தேன் உனது கவிதைச் சிறப்பை

அந்தக் கவிதைக் கட்டை அவிழ்த்துப்
படித்த போது பறந்தது என் மனம்
மின்னல் வேகத்தில் பல வருடங்கள் பின்னோக்கி…

நிலாக்காலம் விழாக்காலம் பாடசாலைக்காலம்
அதற்கு மேலாக நாம் வாழ்ந்த போர்க்காலம்
அத்தனை நினைவுகளும் வந்தது முன்னோக்கி

காதல் சுக போக மயக்கம்
அதற்குக்
காசு மட்டுமே உயிர் கொடுக்கும் என்ற
அநாகரீக மனிதர்கள் வாழும் காலத்தில்
நாகரீகமாக சிவகாமியின் காதலைக் கூறி
பசுமையான அந்தக் காதல் புனிதமானது என
வியம்பியது அழகிலும் அழகு!
அந்தக்

கவிதைக்குப் பேரழகு

கழிந்தது காலங்கள் மட்டுமே
நினைவுகள் எப்போதும் எல்லோஉ மனதிலும்
பூத்துக் குலுங்கும் பசுமையான
வசந்தகாலம் என
கவிதைத் தொகுப்புக்கு வளம் கொடுத்தது
அன்பு நண்பனின் நினைப்பு

உலகெங்கும் சிதறி வாழும் பல நட்புக்களை
பாலம் போட்டு மீண்டும் ஒரு
பச்சை மரத்
தொகுப்பாக மாற்றியது
மனதோடு பேசுதல் கவிதைத் தொகுப்பு

## 13. நட்பில் பூத்த மலர்கள்

நண்பன் மனோ எனது மனதோடு பேசுதல் நூல் வெளியீட்டு விழாவில் வாசித்தது....

நண்பா!

வாழ்க வளமுடன்
மேலும்
பல வளமான கவிதைத் துளிகள்
வாய்க்கால் வழியோடி உலகெங்கும்
வயல்களை நிரப்பி பசுமையாக்கட்டும்

வாழ்க வையகம்
வாழ்க தமிழ் மொழி

தென்றலும் புயலும்
ஒளியும் மின்னலும்
என்ற
எம் வாழ்வில்
உந்தன் நட்பு என்றுமே
தென்றல்.

மதிலும் வேலியும்
ஒழுங்கையும் தெருவும்
ஏன் சைக்கிளும் கூட
எம் நட்புக்குச் சாட்சி.
அதுவே நீ எனக்கீர்ந்த
மாட்சி.

உன்னைப் பார்த்து
எழுதப் பயந்தவன் நான்
இக்கவிதையை எழுதிப் பார்த்து
மனதால் உயர்ந்தவன்.

தாய்மையின் வடிவமாய் கொண்ட
உன் அன்னை
பொன்னியின் செல்வனாய்
ஈன்றாள் உன்னை.

சான்றோன் எனக்
கேட்ட மறத்தாய் அன்றோ
அவள் எழுதிய
அழகிய கவிதை
நீ அன்றோ!

வான் இடிந்த போதும்
அவள் பதறியதில்லை
வாள் எடுத்த மைந்தனுக்கு வீரத்திலகமிட்ட தமிழிச்சி.

அவளோ ஒரு
புறநானூற்றுத் தாய்.

தன் வீட்டைச்
சத்திரமாக்கி
சரித்திரம் படைத்தவள்

சத்திய சோதனை
நித்தியம் வருத்தியும்
பத்தினித் தெய்வமாய்
பண்புடன் வாழ்ந்தவள்.

அந்த வாசுகிக்கு
ஒரு வள்ளுவன் வாய்த்தான்.

இந்த வாசுகிக்கோ
ஒரு வல்லவன் வாய்த்தான்.
அவள் உன் மன்மத
அம்பினால் காயப்பட்டவள்
செல்வனே என்று
உன் வயப்பட்டவள்.

உன் உதிரத்தில் உதித்த
முத்துக்களிரண்டு
தம் உயர்விலே
உனைப் போல் ஆகிறார் இன்று.

இவன் வேர்களை மறக்காத விழுது
பூக்களை மறக்காத
பெரு விருட்சம்.

விட்டில் பூச்சியை
விண்மீன் ஆக்கினாய்

வேரில் வெந்நீர்
ஊற்றும் உலகில்
நீயோ செந்நீர் ஊற்றினாய்.

செல்வோம் என்றிடும்
எந்தச் செல்வமும்

கல்விச் செல்வமே
கடைசியில் எஞ்சிடும்
என்பதால்
கல்விக்கோர் கழகம் கண்டவன்.

உன் பார்வை
சிலரைப் பதற வைத்தது
உன் வியர்வை பலருக்கு
வேரை வைத்தது.

பலர் வேற்றூர் போகப்
பயணம் சொல்கையில்
நீயோ போருக்குப்
போகப் பயணம் சொன்னவன்.

நாட்டிலே இருந்தால்
உன் நிலைமையோ வேறு

அந்த நாட்டுக்கு
கிடைக்கவில்லையே அந்தப் பேறு.

படைத்தலைச் செய்பவன்
அந்த தில்லை நடராஜன்.

பல படைப்புகள் செய்தவன்
இந்தக் கலட்டி நடராஜன்.

உன் கவிதைகள்
வீசும் தென்றலாய் ஆயின
நரம்பினை அசைக்கும்
வீரியம் கொண்டன.

உன் வரிகளில்
உன் உள்ளம் தெரிந்தது

அதில் விடுதலை
வேட்கை நெருப்பாய் எரிந்தது.

உன் காதலின் ஆழமும்
கொஞ்சம் புரிந்தது.

உன் கவிதைகள்
எங்கள் தூக்கத்தைக் கலைக்கும்
உணர்வாய் எழுந்து
ஊருக்கு அழைக்கும்.

கவிதை உன்னுள் சுரப்பது அன்றி
உன்னுள் இருப்பது.
உள்ளம் உலாப்போனபோது
கண்ட கனவாக
உன் கவிதைகள் எம்மை
எங்கோ காவிச் சென்றன.

உன் கன்னிக் கவிதையே
கிழமாய் இருந்தது.

அதை வாசித்த போது
என் கண்கள்
குளமாய் ஆயின.

தமிழில் குளித்தவன் நீ
கவிதை எழுதிக்
குவித்தவன் நீ

நீ மனதோடு மட்டும்
பேசிடவில்லை
எம் மண்ணோடு நிறையப்
பேசியிருக்கிறாய்.

இன்னும் தமிழை நீ
ஏட்டினில் ஏற்று
எம்மனதுடன் நீ
நிறையவே
இன்னும் பேசு.

இன்று தான் உனக்கு
ஐம்பது இல்லை
இருபதில் இருந்தது உனக்கு
ஐம்பதின் பக்குவம்.

ஐம்பதில் உனக்கோ
இருபதின் இளமை.

இந்த நட்பு நதி
நீண்டு நீண்டு ஓடி
என் நெஞ்சை என்றும்
நனைத்துச் செல்லும்.

பல நிகழ்வுகளை
நினைத்துச் செல்லும்.

காலக் கடல் கடந்து,
நீலக் கடல் கடந்து
கவிதை என்னும்
கட்டுமரமேறி
நீள வழி வந்தவனே
நீ வாழ்க!

உண்டோ தமிழ் என்று
உள்ளம் பதறுகையில்
இங்கே தமிழ் என்று
எழுதிக் குவித்தவனே
நீ வாழ்க!

நான் கவிதை எழுத
உன் காவியமாயிடும்
வரைந்து முடியாத
ஓவியம் ஆயிடும்.

ஆதலால் உன்னை
பல்லாண்டு பல்லாண்டு
வாழ்கவென
நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

பெற்றவள், உற்றவள்
பிள்ளைகளுடனே
நூறாண்டு வாழ
வாழ்த்துகின்றேன்.

12 - 06 - 2014



நானும் எனது நூலும்...

எனது பெயர் நடா சுப்பிரமணியம்.
ஈழத்தின் வடமுனையில் மூன்று திசைகளிலும் கடலால் சுற்றிவளைக்கப்பட்ட அழகான பருத்திநகர் எனது ஊர். ஓயாமல் பேசுகின்ற எங்களூர் கடலலைகளிடம் கவிதைகளை நான் கற்றிருக்கின்றேன். அங்கே நீண்டு விரிந்த வெண்மஞ்சள் மணற் பரப்பில் கிறுக்கிக் கிறுக்கி கவிதைகள் வரைய பயின்று இருக்கின்றேன்.

காலம் ஒரு பெரு மழையின் ஊடாக என்னைப் பயணிக்க வைத்திருந்தது. அந்த மழையில் நனைந்து நனைந்து நான் நடந்து வந்த அனுபங்களை எனக்குத் தெரிந்த மொழியில் எனக்குத் தெரிந்த வகையில் இங்கு பதிவு செய்து இருக்கின்றேன். ஆகவே இங்கே எனது எழுத்துக்களில் எனது மனதின் ஈரம் இருக்கும். எனது வாழ்வியலின் சாரம் இருக்கும்.
இவை வெறும் கிறுக்கல்கள் அல்ல...
நான் கடந்து வந்த பாதைகளின் ஒரு வரைபடம்...
நான் சந்தித்த உயிர் உறவுகளின் வரலாறு....
“மழையில் நனைந்த ஒரு பொழுதில்” என்ற தலைப்பிலான இந்த நூல் எனது இரண்டாவது நூல். என்னைப் போன்ற ஒரு சாதாரணமான ஒருவனால் மட்டும் இத்தகைய ஒரு கவிதை நூலினை வெளிக் கொண்டுவந்து இருக்க முடியாது. இந்தக் கவிதை நூலின் பின்னால் அன்பான சில பல உறவுகளின் உழைப்பும் ஊக்கமும் இருக்கின்றது. அவர்கள் எல்லோருடைய பெயர்களையும் பதிவு செய்ய இந்தப் பக்கம் போல பல பக்கங்கள் தேவைப்படும். இந்த நூலின் எனது உரையில் நன்றி கூற வேண்டிய உறவுகளில் ஒரு சிலரின் பெயரை தவற விட்டு விட்டேன்.
முதற்கண் இந்த நூலின் முன்பக்க ஓவியத்தை வரைந்து தந்த எனது முகநூல் உறவு கோமதி குமாரசாமி அவர்களிற்கு எனது மனமார்ந்த நன்றியினை இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். மேலும் கவிதைகளுக்கான ஓவியங்களை வரைந்து தந்த ஜெயந்தன், அருந்தா ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றி.
இந்நூலை சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்ட ஜீவநதி பதிப்பகத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.
மேலும் தனது சிரமத்தையும் பொருட்படுத்தாது எனது வேண்டுகோளைச் சிரத்தில் கொண்டு,இந்நூலில் உள்ள அத்தனை கவிதைகளிலும் உள்ள எழுத்துப் பிழைகளச் சரிபார்த்து உதவிய எனது மாணவியும், எனது அன்பு நண்பியுமான துஷ்யந்திக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
மேலும் இந்த நூலின் பதிப்பு தொடர்பான முழுப்பொறுப்புக்களையும் பொறுப்பெடுத்து செவ்வனே நிறைவேற்றிய எனது கவிதைகளின் அபிமான வாசகியும் எனது அன்புத் தோழியுமான வாசுகி விமல் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நடா சுப்பிரமணியம்

ISBN 955524763-6
9789555247638